# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் ௵ ஏப்ரல் ௴ 7உ [ந. 243


**தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.**

பிரஸங்கம் CCXLIII.

## ஜெர்மனி சிரமத்தைப்பொறுத்து நிற்கக்கூடுமா?

### ஐரோப்பிய நடவடிக்கையை ஆராய்ச்சி செய்பவர்.

(அப்ஸர்வர் பத்திரிகை).

ஜெர்மனி இப்பொழுதுதான் தீவிரமாகப் படையெடுக்கப்பட்டிருக்கிறது. ஆகனைச் சுற்றியுள்ள ஒரு சிறிய பிரதேசத்தை ஆக்கிரமித்தது பூர்ணமான படையெடுப்பு ஆகாது. இந்த மகத்தான படையெடுப்பை ஜெர்மனி சமாளித்துவிடுமா அல்லது வீழ்ச்சி பெறுமா என்பதுதான் முக்கியமான பிரச்னை. இது ராஜீயம் சம்பந்தமான பிரச்னையாகும். இதற்கும் ராணுவ பொருளாதார பிரச்னைகளுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது.

சென்ற மூன்று வாரங்களில் ஜெர்மனிக்குக் கிடைத்த தோல்விகள் இதற்குமுன் ஏற்பட்டவைகளைவிட பிரமாதமானவைகளல்ல. வடக்கு சைலீஷியாவிலுள்ள நிலக்கரி தளங்களையும் தொழிற்சாலைகளையும் இழந்ததும் ஜெர்மனியை முடமாக்கமுடியாது. ஆகிலும் அது காலக்கிரமத்தில் பயனை விளைவிக்கும். படையெடுப்பினால் ஏற்படும் ராஜீய விளைவுகள்தான் இப்பொழுது முக்கியமானவை. உதாரணமாக, ஜெர்மனியின ஆதிக்கத்துக்குட்பட்ட ஜெர்மன் நாடுகளும் ஜெர்மானியர்களும் பிரிந்துபோக நேரிடும். நாட்டைக் காலிசெய்வதினால் நிர்வாகம் சீர்கெட்டுப்போய்விடும் (அகதிகள் இலாகாவைச்சேர்ந்த மந்திரி அவருடைய டிரைவரைத் தவிர மற்றொருவரையும் அதிகாரம் செய்யமுடியாது) ஏராளமான அகதிகள் வருவதினால் பலஹீனமாக உள்ள நிர்வாகத்துக்கு அதிக சிரமம் ஏற்படும். கடைசியாக, ஒவ்வொரு ராணுவ நடவடிக்கையும் ஜெர்மன் நகரங்களையும், ஜெர்மன் பண்ணைகளையும், ஜெர்மன் உயிர்களையும் அழித்துவிடும். கேவலம் ராணுவ யுத்தப் பொருளாதார நிலமையைப் பொருட்படுத்தாமல் இந்த அழிவுகளெல்லாம் போர்புரியும் ஆர்வத்தையும் சக்தியையும் நிலைகுலைத்துவிடும். படையெடுப்பினால் இந்த விளைவு இதாலியிலும் பிரான்ஸிலும் மற்ற சிறிய நாடுகளிலும் ஏற்பட்டது. ஆனால் இந்த விளைவு சைனாவிலும் ருஷ்யாவிலும் ஏற்படவில்லை. ஜெர்மனி எந்த முறையைப் பின்பற்றும்!.

இந்தப் பிரச்னைக்கு பதிலுரைக்குமுன் என்ன சம்பவிக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கிறோமென்று முடிவு செய்யவேண்டும். பூர்ணமான ராணுவ வெற்றிகிடைக்க காலதாமதம் ஏற்படுமென்றாலும் படையெடுப்பின் மூலம் ஒரு தேசத்தின் எதிர்ப்பு மூன்று முறைகளில் ஓய்ந்துவிடும்.

முதலாவதாக, நிர்வாக, ராணுவ அமைப்புகள் சீர்கெட்டுப்போய்விடும். நிர்வாகமும் பொதுஜனங்களும் போர்புரிய விரும்பினாலும் போர் நடைபெறாது. இந்த நிலமை 1939-ம் வருஷம் போலந்திலும் 1941-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் யூகோஸ்லாவியாவிலும் ஏற்பட்டது.

இரண்டாவதாக, படையெடுப்புக்குட்பட்ட நாட்டிலுள்ள நிர்வாகம் போர்புரியும் உறுதியை இழந்து சரணடையும் கதியை அடைந்துவிடும். பொதுஜனங்களைக் கலந்து ஆலோசிக்கவில்லை. 1940-ம் வருஷத்தில் பிரான்ஸில் இது சம்பவித்தது.

மூன்றுவதாக, நிர்வாகம் போரை நடத்த பிரியப்பட்டாலும், தேசத்திலுள்ள சில வகுப்பினர்களின் பெரும்பாகத்தாருக்கு அடிபணியும் மனப்பான்மை மிகுதியடைந்துவிடும். யுத்தவெறி கொண்ட நிர்வாகத்தை எடுத்துவிட்டு சமாதானத்தை விரும்பும் நிர்வாகம் அமைக்கப்படும். இது இதாலியில் சம்பவித்தது.

இந்த மூன்று சம்பாவிதங்களில் நாம் முதல் இரண்டையும் தள்ளிவிடலாம். நிர்வாகச் சீர்கேடு சம்பந்தப்பட்டமட்டில் கிழக்கு ஜெர்மனியில் வரிகளும் விதிகளும் வசூலிக்கப்படவில்லையென்றும் மற்றும் பொதுஜனங்களின் சுகவாழ்க்கைக்குறியவைகள் போய்விட்டன வென்றும் நாம் நம்பலாம். ஆகிலும் இதற்குப்பின் நிர்வாகம் முறிபடுவதற்கு வெகுகாலம் ஆகும். சில பத்திரிகைகளில் தலையங்கத்துடன் வெளிவந்திருக்கும் உள்நாட்டுக் கலகத்தைப் பற்றிய தகவல்கள் நம்பத்தக்க வட்டாரங்களிலிருந்து ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. மேலும் கிழக்கிலிருந்துவரும் அகதிகளும் பொதுவாகக் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். தனிப்பட்டவர்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டபோதிலும் தேசிய வீழ்ச்சி ஏற்படவில்லை.

ஹிட்லரும் அவனுடைய பரிவாரங்களும் போர்புரியும் ஆர்வத்தை இழந்துவிட்டார்களென்பதற்கு யாதொரு அடையாளமும் காணப்படவில்லை. கடைசியாக ஆற்றிய சொற்பொழிவில் ஹிட்லர் இதை மறுபடியும் விளக்கிக் காட்டினான். அந்தப் பேச்சு அவ்வளவு ஸ்வாரஸ்யமானதாக இல்லை. ஆகிலும் அது நம்பிக்கையை யிழந்தவன் பேசுவதுபோல் இல்லை. ஜெர்மனி பூராவாக அழிபடுவதையும் அல்லது ஜெர்மானியர்கள் நாசமாகுவதையும் ஹிட்லர் பொருட்படுத்தவில்லையென்று இப்பொழுது தெளிவுபடுகிறது. மூன்றுவது உலக யுத்தத்தை நோக்கி உலகம் ஐரோப்பியக் குழப்பத்தின் வழியாகச் சென்றுவரும்பொழுது நாஸி இயக்கம் நிலைத்திருப்பதற்கு அநேக சந்தர்ப்பங்களிருக்கின்றனவென்றும் அவன் மதித்திருக்கிறான்.

மூன்றுவது சம்பாவிதம் பாக்கியிருக்கிறது. சமாதானத்தை விரும்பும் கக்ஷி தேசத்துக்கு நாசம் ஏற்படாமல் காப்பாற்றவும் ஜனங்களின் ஆதரவைப்பெறவும் உறுதிகொண்டு ஹிட்லர் நிர்வாகத்தை அப்புறப்படுத்தக்கூடும். 1944-ம் வருஷம் ஜூலை மாதம் 20-ம் தேதியன்று அவ்விதமான முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அது பயன்படவில்லை. மறுமுறை அதை வெற்றிகரமாக நடத்த முடியுமாவென்பதுதான் தற்போதிய பிரச்னை.

நாம் ஒரு விஷயத்தை விளக்கிச் சொல்லுவோம். இந்த நடவடிக்கை நன்றாய் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருக்கும் ஜனங்களால் ஆரம்பிக்கப்படமுடியாது. சமாதான நிர்வாகம் அமைக்கப்பட்டுவிட்டால் அதற்கு சமாதானத்தை விரும்பும் பொதுஜனங்கள் பலமான ஆதரவளிப்பார்கள். ஆனால் அவர்கள் இப்பொழுது அவ்விதமான நிர்வாகத்தை அமைக்க முடியாது. நிர்வாகத்தை அப்புறப்படுத்துவதைவிட அகதிகளுக்கு அடுத்த சாப்பாட்டுக்கு எவ்விதம் ஏற்பாடு செய்வது என்ற கவலைதான் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் ஜெர்மன் பொது மக்களுக்கு பொதுப்படையாக வேண்டுகோள் செய்வதில் யாதொரு பிரயோஜனமுமில்லை.

ஜெர்மனியை எதிர்த்துப் போராடுவதும் நேசதேசத்தாருடன் ஒருவாறு நல்லுணர்ச்சியுள்ளதும் ஊக்கமுள்ள மனிதர்களுள்ள ஏற்பாடான ஸ்தாபனம்தான் உபயோகமுள்ள ஒரு திட்டத்தைக் கையாளமுடியும். அவர்கள் ஜெர்மானியர்களின் அபிப்பிராயப்படி தேசாபிமானமும் கண்யமும் உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்.

அப்பேர்ப்பட்ட கோஷ்டிகள் ஹிட்லரின் படைவரிசைக்குப்பின் கீழறுப்பான் வேலை செய்வார்களாவென்று நாம் அறியமுடியாது. ஜூலை 20-ம் தேதி நடைபெற்ற முயற்சி பயன்படாமல் போய், அதன்பின் ஏற்பட்ட சுத்திகளுக்குப்பின் இது நேரிடுவது சம்பாவிதமில்லை. ஆகிலும் ருஷ்யப்படை வரிசைகளுக்குப்பின் இருக்கும் ஒரு ஜெர்மன் கோஷ்டியார் ஜெர்மன் பூமியில் நிலைபெற முயற்சி செய்யலாம். அதுதான் பீல்ட் மார்ஷல் பாலலுனுடையவும் ஜெனரல்வான் சீட்லிட்ஸினுடையவும் தேசியக் கமிட்டி. அதுதான் மாஸ்கோவிலுள்ள சுதந்திர ஜெர்மனி. இப்பொழுது அபிவிருத்தியடைந்துவரும் நிலைமையில் அது முக்கியமான வேலையைச் செய்யக்கூடும். அந்த ஸ்தாபனத்தில் போலிஸ், ஜட்ஜிகள், உபாத்தியாயர்கள், சகலவிதமான நிர்வாகிகள் எல்லாம் சேர்ந்து 80,000 பேர்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதன் தலைவர்களைப்பற்றி நாம் எவ்வாறு நினைத்தாலும் அவர்கள் ஜெர்மன் மக்களிடம் நல்ல மதிப்புப்பெற்றவர்கள். கோனிக்ஸ்பர்க், பிரெஸ்லா, பெர்லினில் பாலஸ் நிர்வாகத்தை அமைத்து ஹிட்லரை அப்புறப்படுத்தி, ஒவ்வொரு சுதந்திரதாகமுள்ள

ஜெர்மானியரின் விசுவாசத்தையும் அதிகாரமுறையில் பெற்று, ஜனங்களுக்கு சமாதானத்தையும் ஒழுங்குமுறையும் வழங்கினால், ஜெர்மனியில் பலமாகக் காணப்படும் துயரத்துக்கும் அருவருப்புக்கும் விமோசனம் ஏற்படும். ஜெர்மன் எதிர்ப்பை நீடிப்பதற்கும் அதை நிறுத்துவதற்குமுள்ள வித்யாசம் காணப்படும்.

அப்பேற்பட்ட நிர்வாகம் அமைக்கப்படுமா? அல்லது எப்பொழுது அமைக்கப்படும் என்று சொல்லுவதற்கில்லை. அதன் பொறுப்பு ஸ்டாலினிடம் இருக்கிறது. அந்தப் பொறுப்பை அவர் அலக்ஷியம் செய்துவிடமாட்டார்.

---

# வார யுத்தச் செய்திகள்.

## (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 26—3—45 (திங்கட்கிழமை). | நேசதேசப் படைகள் பிலிப்பைன்ஸிலுள்ள சேபுத் தீவிலிறங்கின. |
| 27—3—45 (செவ்வாய்க்கிழமை). | ருஷ்யர்கள் ஸ்ட்ரெஹலனேயும் ரைப்னிக்கையும் பிடித்தார்கள். ஆர்ஜண்டினா அச்சு நாடுகள் பேரில் போர் தொடுத்தது. |
| 28—3—45 (புதன்கிழமை). | ருஷ்யர்கள் வீயன்னாவுக்குச் செல்ல கடைசி இயற்கை தளங்களான ராப் நதியைத் தாண்டினார்கள். ருஷ்யர்கள் போலந்திலுள்ள கிட்னியாவைப் பிடித்தார்கள். |
| 29—3—45 (வியாழக்கிழமை). | அமெரிக்கர்கள் ஜெர்மனியிலுள்ள பிராங்க்பர்ட்டைச் சுத்தி செய்தார்கள். |
| 30—3—45 (வெள்ளிக்கிழமை). | நேசதேசப் படைகள் பர்மாவில் கியாக்ஸியைப் பிடித்தன. ருஷ்யர்கள் ஆஸ்திரியாவுக்குள் நுழைந்தார்கள். |
| 31—3—45 (சனிக்கிழமை). | பிரிடிஷ் படைகள் டார்ட்மண்ட்—எம்ஸ் கால்வாயைத் தாண்டின. |
| 1—4—45 (ஞாயிற்றுக்கிழமை). | அமெரிக்கப் படைகள் ரைன்கிட்ஸ் என்ற ஒகினாவாத் தீவிலிறங்கின. |
| 2—4—45 (திங்கட்கிழமை). | பிரிடிஷ் படைகள் ஜெர்மனியிலுள்ள மன்ஸ்டரை அடைந்தன. |
| 3—4—45 (செவ்வாய்க்கிழமை). | பிரிடிஷ் படைகள் ஆஸ்னாபிரக்குக்குள்ளும் ஹாமுக்குள்ளும் நுழைந்தன. அமெரிக்கர்கள் காஸ்ஸலை ஆக்கிரமித்தார்கள். |

## (B)-செய்திச் சுருக்கம்.

**மேற்குப் போர்முனை.—**

(2) ரைன் நதிக்கரைப்போர் முடிந்து விட்டது. அநேக பாலங்கள் வழியாக நேசதேசத்தார்கள் ஜெர்மனிக்குள் குவிந்து வருகிறார்கள். ரூர் பிரதேசம் சுற்றி வளைக்கப்பட்டுவிட்டது.

(2) பீல்ட் மார்ஷலிடமுள்ள பிரிடிஷ், கனடிய, அமெரிக்கப் படைகள் ரைன் நதியை ரூருக்கு வடக்கில் வெசலில் தாண்டியபின் எம்மரிச் டார்ட்மண்ட்-எம்ஸ் கால்வாய், மன்ஸ்டரைக் கைப்பற்றியபின் ஆஸ்னாபிரக்குக்குள் நுழைந்து விட்டார்கள். மத்தியிலுள்ள பிரிடிஷ் 2-வது சேனை வெஸ்ட்பாலியா சமவெளிகளின் குறுக்கே ஹனோவரையும் பெர்லினையும் நோக்கி முன்னேறுகிறது.

(3) பீல்ட்மார்ஷல் மாண்ட்காமரி இருக்கும் இடத்திற்கு வடக்கில் அவருடைய பிரிடிஷ், கனடியப் படைகள் ஹாலந்தில் ஆர்ன்ஹெமுக்கும் நிஜ்மேகனுக்கும் மத்தியிலிருந்து பூராவாகப் பின்வாங்கும்படி ஜெர்மன் படைகளைக் கட்டாயப்படுத்திவிட்டன. இந்தப் பகுதியில் ஜூடர்ஸிக்குப் போகும் வழியில் நார்ட்ஹார்ன் பிடிபட்டது. ஹெக் துணிக்கப்பட்டது.

(4) பீல்ட்மார்ஷல் மாண்ட் காமரியின் மத்திய அரங்கத்துக்குத் தெற்கில் அமெரிக்க 9-வது படை உலகத்திலேயே பெரிய உள்நாட்டுத் துறைமுகமான டூயிஸ்பர்க்கையும் ரெக்லிங்காஸன் என்ற நகரத்தையும் பிடித்திருக்கிறார்கள்.

(5) அமெரிக்க 1-வது சேனை ரெமெகன் முன்னேறும் வாசலிலிருந்து முன்னேறி ஏடர் அணையையும், ரூரின் வடக்கு எல்லையிலுள்ள பாடர்பார்ன் என்ற நகரத்தையும் பிடித்தார்கள். அது லிப்ஸ்டாட்டிலுள்ள அமெரிக்க 3-வது சேனையுடன் பாடர்பார்னில் தொடர்பு ஏற்படுத்தி விட்டது.

(6) அமெரிக்க 3-வது சேனை பிராங்க்பர்ட்டைப் பிடித்தபின் புல்டாவை சுத்திசெய்து விட்டு காஸ்ஸலுக்குப்போகும் வழியில் கோதாவை அடைந்து விட்டது.

(7) அமெரிக்க 7-வது சேனை சர்வகலாசாலை நகரமான ஹிடல்பர்கையும், பெரிய தொழிற்சாலை நகரமான மான்ஹீமையும் பிடித்தது. பிரெஞ்சு 1-வது சேனையுடன் மான்ஹீமுக்குத் தென்மேற்கில் ஸ்பெயருக்கருகில் தொடர்பு ஏற்படுத்தி விட்டன.

(8) பிரெஞ்சு 1-வது சேனை பேடன் என்ற ஜெர்மன் மாகாணத்துக்குள் முன்னேறி வருகிறது.

(9) ஒரு புதிய அமெரிக்க 15-வது சேனை இப்பொழுது தோன்றியிருக்கிறது.

**கிழக்குப் போர்முனை.—**

(1) வடக்குப் பகுதியில் சென்ற வாரத்தில் கிட்னியாவும் இந்த வாரத்தில் டான்ஸிக்கும் பிடிபட்டதுதான் முக்கிய சம்பவங்கள்.

(2) தெற்கில் ஆஸ்திரியாவின் தலைநகரமான வியன்னாவை நோக்கி படைகள் மூன்று பகுதிகளாக முன்னேறுகின்றன. கோனியெவ் செக்கோஸ்லாவாகியாவிலுள்ள மொராவா இடைவெழியாக முன்னேறுகிறார். மாலினோவ்ஸ்கி, வியன்னாவுக்குத் தெற்கில் 30 மைல்களிலுள்ள வினர் நியூஸ்டாட் வழியாக முன்னேறுகிறார். டால்பூகின் கிராஸ் வழியாக முன்னேறுகிறார்.

(3) கோனியெவ் ஓடர் பகுதியில் ராடிபானையும் பிஸ்காவையும் பிடித்தார்.

(4) மாலினோவ்ஸ்கி ட்ரோயா, நிட்ரா நதிகளைத்தாண்டி கோமாரம், நவ்ஸாம்கி, நிட்ரா நகரம், காலாண்டா, ஸெண்ட் கொதார்ட், வாஸாவார், பீஷ்டார்ட், மாகியாரோவா, கிரெம்னிட்ஸ் முதலியவற்றைப் பிடித்தார். அவர் இப்பொழுது பிராடிஸ்லாவாவை அடைந்து விட்டார்.

(5) டால்பூகின் ஆஸ்திரிய எல்லைச் சரகத்தைக் கடந்து ஓசொர்ன, சார்வார், கியார், எண்ணெய் நிலையமான நாகிகானிசா, வீனர் நியூஸ்டாட் முதலியவற்றைப் பிடித்தார். அவர் வியன்னாவின் எல்லைப்புற தற்காப்புகளைத்தாக்கி வருகிறார்.

**இதாலி.—**8-வது சேனை ஆட்ரியாடிக் கடலுக்கும் ராவன்னாவுக்கு வடகிழக்கிலுள்ள பொடி பிரைமாரோவுக்கும் நடுவில் தாக்கிவருகிறது. ராவன்னாவுக்கு வடக்கில் வள்ளிடி கொமாகியோ ஏரியின் கரையில் படைகள் இறங்கி விட்டன.

**பஸிபிக்.—**

(1) பிலிப்பைன்ஸிலுள்ள நெக்ராஸ், மாக்டான், காயிட் முதலிய தீவிலும், ஜப்பானுக்கு தெற்குக்கோடியிலுள்ள கியூஷுவுக்கருகில் கெராமி தீவுக்கூட்டத்துக் கருகிலுள்ள காமாஜிமா, மேயஜிமாவிலும், ஜப்பானுக்கு சமீபத்திலுள்ள ரியூக்யூஸ் தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த ஒகினவா, குமித்தீவுகளிலும் போர்னியோவுக்கும் பிலிப்பைன்ஸுக்கருகில் உள்ள மிண்டானோவுக்கும் மத்தியிலுள்ள சூலு தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த டாவியிலும் படைகள் இறங்கி விட்டன.

பிரிடிஷ் பஸிபிக் படையைச் சேர்ந்த விமானப்படைகள் ரையூ கியூன்லைச் சேர்ந்த ஸாயிஷிமாத் தீவுகள் பேரிலும் சுமாத்ராவிலும் அந்தமான்ஸிலுமுள்ள கடற்கரை அமைப்புகளின் பேரிலும் வெடிகுண்டுகளை வீசின.

**சைனா.—**(1) அமெரிக்க 14-வது படை லாயோகௌ என்ற இடத்திலுள்ள தளத்தைக் காலிசெய்து விட்டது.

**பர்மா.—**(1) சீனர்கள் பர்மா சைனா எல்லைச்சரகத்திலுள்ள லாஷியோவுக்குத் தென் கிழக்கில் 53 மைல்களிலுள்ள மாஸ்கியையைப் பிடித்தார்கள்.

(2) மாண்டலேக்குத் தெற்கில் 24 மைல்களிலுள்ள கியாக்ஸியும், மிஞ்சானுக்குக் கிழக்கிலுள்ள நாடொகியும் விழுந்து விட்டன.

(3) அரகானில் லெட்பானில் படைகளிறங்கியபின் 15-வது இந்திய சேனை டாங்குப்புக்குள் நுழைந்து விட்டது.

---

# சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**25—3—45.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—முக்கிய ரயில்வே ஸ்தலங்கள் :—ஹனோவர் (Hanover), ஆஸ்னாபிரக் (Osnabruck) ; மன்ஸ்டர் (Munster).

எண்ணெய் சேமிப்பு.—எமென் (Ehmen), பூசன் (Buchen) ஹிட்ஸாக்கர் (Hitzacker).

விமான நிலயம்.—பிராக் (Prague).

விமானச்சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

போக்குவரத்துகள்.—வட இதாலி (Northern Italy).

கப்பல்கள்.—நார்வே (Norway).

இரவு —பீரங்கி இலக்குகள்—ஹாலந்து (Holland), பேர்லின் (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்.—ரியூக்யூ (Ryukyu) தீவுக் கூட்டங்கள்.

ஸெபு (Sebu).

தற்காப்புகள்,—லூஸானிலுள்ள லெகாஸ்பி (Legaspi).

**பர்மா (Burma).**

ஜப்பானியக் கப்பல்கள்.—டெனஸரிம் (Tenasserim) கடற் கரை.

**26—3—45.** (திங்கட்கிழமை)

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.— தொடர்ச்சியான எண்ணெய்க்கிணறு ஸ்தாபனங்கள்—செயிட்ஸ் (Zeitz).

கவசம் பூண்ட வார் நிலயங்கள்.—பிளாயென் (Plauen).

போக்குவரத்துகள்.—ஆஸ்திரியா (Austria), ஹங்கேரி (Hungary).

ஆஸ்திரியாவிலுள்ள வியன்னு (Vienna).

ஜெர்மன் தளவாடங்கள்.—டார்ஸ்டன் (Dorsten), போகல்ட் (Bocholt).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்.—ரியூக்யூ (Ryukyu) தீவுகள்.

எதிரி சைனியங்கள் விமான நிலயங்கள்.—பார்மோசா (Farmosa).

பெட்ரோல், தளவாட துவியல்கள் —பாங்காக் (Bangkok).

**பர்மா (Burma).**

எதிரி சைனியங்கள்.—கியக்குஸ் (Kyaukse).

துவியல்கள், தளவாடச் சேமிப்புகள்.—ஸ்வா (Swa), கியங்கான் (Kyungon).

ஜப்பானியத் துருப்புகள்.—லெய்ஹாவின் அருகே.

சுரங்கவேடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

**27—3—45.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—ரயில்வே ஸ்தலம்—பாடர்பார்ன் (Padderborn).

U படகு தங்குமிடங்கள்.—பார்ஜ் (Farge).

U படகுகள், நாசகாரிகள்.—மேற்கு பால்டிக், டச்சு (Dutch), நார்வீஜியக் (Norwegian) கடற்கரை.

வியாபாரக் கப்பல்கள்.—ஸ்காகராக் (Skagerrak).

ரயில்வே இலக்குகள்.—ஹங்கேரி (Hungary), ஆஸ்திரியா (Austria), செக்கோஸ்லாவாக்கியா (Czechoslovakia).

ஜெர்மன் போக்குவரத்துகள்.—வடகிழக்கு இதாலி (N. E. Italy).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு —பேர்லின்—(Berlin).

பீரங்கி ஸ்தானங்கள்.—நெதர்லாண்டு (Netherland).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய இலக்குகள்—குயூஷு (Kyushu).

**பர்மா (Burma).**

ஜப்பானிய சைனியங்கள்.—மெயிக்திலா (Meiktila).

குழிகள் கியாகூஸ் (Kyaukse).

இலக்குகள் —மயோகி (Myogyi).

ஸ்டீமர் ஸ்டேஷன்கள் படகுகள் சேமிப்புகள். ஹென்ஸாடா (Henzada).

**28—3—45.** (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—தொழிற்சாலை தளவாட இலக்குகள்—பெர்லின் (Berlin), ஹனோவர் (Hanover).

ஜெர்மன் கப்பல்கள்.—நார்வீஜியக்கடலில் (Norweign).

போக்குவரத்துகள்.—ஆஸ்திரியா (Austria), யூகோஸ்லாவியா (Yugoslavia), வட இதாலி (N. Italy).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—பெர்லின் (Berlin).

சுரங்கவேடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்.—ரியூக்யூஸ் (Ryukyus), மாரியானஸ் (Marianas), போனின்ஸ் (Bonins).

விமானச் சண்டைகள் —ஒகினவா (Okinawa).

**பர்மா (Burma).**

விமான நிலயங்கள் போக்குவரத்துகள்.—மத்திய பர்மா (Central Burma).

**29—3—45.** (வியாழக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—ஸப்ளை ஸ்தாபனங்கள், போக்கு வரத்துகள், பலத்த முனைகள்—*வட இதாலி* (N. Italy).

ரயில்வே இலக்குகள்.—*பிரென்னர்* (Brenner) *கணவாய்.*

ரயில் தளங்கள்.—*வியன்னு* (Vienna), *ஓராஸ்* (Oraz).

தளவாடங்கள், எண்ணெய்க் குவியல்கள்.—*ஸ்பெஷியா* (Spezia).

ஜெர்மன் துருப்புகள், தளவாடக் குவியல்கள், பீரங்கி ஸ்தாபனங்கள்.—*மத்திய ஜெர்மனி* (Centrl Germany).

கப்பல்கள்.—*ஸ்காகராக்.*

விமானச்சண்டைகள்.-*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

**தூரக்கிழக்கு (Far East).**

தொழிற்சாலை இலக்குகள்.—*நாகோயா* (Nagoya)

ஜப்பானிய இலக்குகள்.—*ரியூக்யூ* (Ryukyu).

**பர்மா (Burma).**

ஸப்ளைக் குவியல்கள்.—*லால்கா* (Lalhka), *தாங்கியி* (Taunggyi).

பாலங்கள்.—*பர்மா-ஸியாம்* (Burma-Siam) *ரயில்வே.*

இலக்குகள்.—*ரங்கூன்* (Rangoon).

**30—3—45.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—யு படகு துறைமுகம், யு படகு கட்டும் தரை கடற்படை, கடற்கப்பல்கள், எண்ணெய் சேமிப்புகள்—*ஹாம்பர்க்* (Hamburg), *பிரெமென்* (Bremen), *வில்ஹெல்ம்ஷாவன்* (Wilhelmshaven).

இலக்குகள்.—*ஆஸ்திரியா* (Austria), *தென் ஜெர்மனி* (Southern Germany).

துறைமுகம்.-*போர்ஸ்கிரவுண்டு* (Porsground).

பீரங்கி இலக்குகள்.—*ஹாலந்து* (Holland).

விமானச் சண்டைகள்.-*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

இரவு.—*பெர்லின்* (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்.—*ஒகினுவா* (Okinawa).

**பர்மா (Burma).**

ஒரு *தகவலும்* இல்லை.

**31—3—45.** (சனிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—தொடர்ச்சியான எண்ணெய் கிணறுகள்—*செயிட்ஸ்* (Zeitz).

ரயில்வே தளங்கள்.—*ஹால்* (Halle).

ரயில்வே தொழிற்சாலை இலக்குகள்.—*பிரன்ஸ்விக்* (Brunswick), *பிராண்டன்பர்க்* (Brandenburg).

ஸப்மரீன் தளம்.—*ஹாம்பர்க்* (Hamburg).

இலக்குகள்.—*லின்ஸ்* (Linz) *வில்லாக்* (Villach), *டிராவிஸோ* (Treviso).

பாலம்.—*இதாலியிலுள்ள ஆலா* (Ala).

இலக்குகள்.—*பிரென்னர் பாஸ் ரயில்வே.*

விமான நிலயங்கள்.—*தென் ஜெர்மனி* (Southern Germany).

விமானச் சண்டைகள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

இரவு.—*பெர்லின்* (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயங்கள்.—*கியூஷு* (Kyushu).

ஜப்பானியக் கிராமங்கள்—பீரங்கி ஸ்தாபனங்கள்.—*ரியூகியூஸ்* (Ryukyus).

**பர்மா (Burma).**

பாலங்கள்.—*பர்மா-ஸியாம்* (Burma-Siam) *ரயில்வே.*

ரஸ்தாப் பாலம்.—*லாய்லம்* (Loilem).

இலக்குகள்.—*லாகூனிலுள்ள மெங்காலடன்* (Mengaladon).

ஸ்டோர் குவியல்கள்.-*பின்மானு* (Pinmana).

ஜப்பானிய தளம்.—*நியாங்கின்* (Nyaungynn).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**26—3—45.** (திங்கட்கிழமை).
**to**
**28—3—45.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.—*தென் கிழக்கு இங்கிலாந்து கடற்கரை.*

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

*எதிரி விமான நடவடிக்கை இல்லை.*

**29—3—45** (வியாழக்கிழமை).
**to**
**30—3—45.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).**

*எதிரி விமான நடவடிக்கை இல்லை.*

**தூரக்கிழக்கு (Far East).**

நேசதேச யுத்தக் கப்பல்கள்.—*ரியூக்யூஸ் திறள்கூட்டத்தை தாக்கியவை.*

**31—3—45** (சனிக்கிழமை).
**to**
**1—4—45** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

*எதிரி விமானநடவடிக்கைகள்* இல்லை.

# யுத்தக் குறிப்புகள்.

**அற்புதச் செய்கை.** பீல்ட்மார்ஷல் மாண்ட்காமரியின் மேற்குப் போர்முனையைப்பற்றிய திரை நீக்கப்பட்டவுடன் இந்த வாரத்திய நிகழ்ச்சியைப்பற்றிய தகவல்கள் புலப்படுகின்றன. இந்தத் தகவல் நமக்கு பிரமையைத் தரக்கூடும். மாண்டி வாக்குறுதி செய்ததை நிறைவேற்றி விடுவார் என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியவரும். அவருடைய தற்போதிய நடவடிக்கை அற்புதமானது. நடவடிக்கை ஆரம்பித்தற்கு 84 மணிகளுக்குள் அவர் ஏராளமான படைகளுடன் ஜெர்மன் படைகளை சிதைத்துக்கொண்டு 100 மைல் நீளத்தில் ரைன்நதியைத் தாண்டி விட்டார். இப்பொழுது அவர் மன்ஸ்டரையும் தாண்டி ஹானோவர், பெர்லினை நோக்கி 37 மைல் முன்னேறி விட்டார். விமான மூலம் சென்ற அவருடைய படைகள் டார்ட்மண்ட் எம்ஸ் கால்வாயைத் தாண்டி விட்டன. ஜெர்மன் விமான தளங்களின் மத்திய நிலையமான ரைனை பிடித்துவிட்டார்கள். ஸட்பன் ஹெஸ்கெலோ கால்வாயை ஒட்டி முன்னேறி வருகின்றன.

வி வி வி வி வி

**நடவடிக்கை.** மார்ச்சு மாதம் 23-ம் தேதி சந்திர வெளிச்சத்தில் மாண்ட்காமரியின் 21-வது சேனை இந்தத் துணிவுகரமான வேலையில் இறங்கிற்று. கால நிலையும் சௌகரியமாக இருந்தது. ரெமெகனுக்கும் வெசலுக்கும் வித்யாசமுண்டென்று சொன்னால் ஹாட்ஜஸுக்கும் அமெரிக்க 1-வது சேனைக்கும் யாதொரு இளப்பத்தையும் நாம் சொல்லவில்லை. ஜெர்மானியர்கள் லூடண்டார்ப் பாலத்தை உடைத்துவிடாமல் வைத்துவிட்டதால் அதிருஷ்ட வசமாக ஹாட்ஜஸுக்கு ரெமெகன் கிடைத்தது. அதைத் தாண்டியபின் அவர் முன் மலைகளும் காடுகளும் பெரும் இடையூறாக இருந்தன. எதிரியின் எதிர்ப்புள்ள ஒரு இடத்தில் நதியைத் தாண்டியிருக்கும் மாண்ட்காமரி ஜெர்மனியின் மர்மஸ்தானத்துக்குச் செல்ல சமவெளிகளில் உள்ள ரஸ்தாவழியாக முன்னேறிவருகிறார். மாண்ட் காமரி விஷயத்தில் யாதொரு அதிருஷ்டமும் தோன்றவில்லை வெசல் என்றும் ரைன் நதி வழியின் முக்கியத்வத்தை அறிந்த கெஸ்ஸல்ரிங் அந்த முனையில் ஏராளமான படைகளைக் குவித்திருந்தார். ஆகிலும் அவை எல்லாவற்றையும் ஒரே இரவில் அவர் இழந்துவிட்டார்,

வி வி வி வி வி

**மூன்று வகைப்பட்ட நடவடிக்கை.** இந்த வெற்றி மூன்று வகைப்பட்ட நடவடிக்கைகளால் ஏற்பட்டது. இந்த திட்டம் வெகு ஜாக்கிரதையாகத் தயாரிக்கப்பட்டது. அநேககாலம் ஒத்திகை செய்யப்பட்டது, நன்றாக ஒருமைப்படுத்தப் பட்டது. முதலில், எதிரியின் போக்குவரத்து மார்க்கங்களை நோக்கிவந்த விமானப்படை கிழக்குக் கரையிலுள்ள தற்காப்புகளை வெடிகுண்டுகள் மூலம் நொருக்கிவிட்டது. அதற்குப் பின் நதியில் படகுகளின் நடவடிக்கை ஆரம்பித்தது. ஆபிரிக்கக் கடற்கரையிலும் இங்லீஷ் கால்வாயைத் தாண்டி நார்மண்டி கடற்கரையிலும் படைகளை இறங்கின கடற் படைக்கு ½ மைல் அகலமுள்ள ஒரு நதியைத்தாண்டுவது பிரமாதமான காரியமல்ல. ஆகிலும் அபாயம் பொருந்திய இழுப்பும், எதிரிகளின் எதிர்ப்பும், புறப்படுவதற்குத் தகுதியுள்ள சௌகரியமான துறைமுகங்களும் இல்லாத ரைன் நதியைத்தாண்டுவது அவ்வளவு சுலபமானதல்ல. 26 டன்கள் கனமுள்ள நேசதேசப் படகுகள் மனிதர்களையும், வாகனங்களையும், பீரங்கிகளையும் ஏற்றிச் சென்று தற்காப்புகள் உள்ள எதிரியுள்ள நதிக்கரையில் அவைகளை இறக்கவேண்டியிருந்தது. இந்தப் படகுகள் நதிக்குள் மிதக்க விடப்படுமுன் நூற்றுக்கணக்கான மைல்கள் ரஸ்தா வழியாகக் கொண்டுவரப்பட்டன.

நதியைத் தாண்டியது அற்புதமான தென்றாலும் அதற்குப் பிந்திய நடவடிக்கைகள் அதை விட சிலாக்கியமாகி விட்டன. ஆகாய, நதி ஆதிக்கத்தினால் ஏற்பட்ட பலன்களை சேனை பயன்படுத்தியது. பொழுது விடியுமுன் கிழக்குக் கரையில் இறங்கிய தரைப்படை தற்காப்பு செய்கிறவர்களை வளைத்துக் கொண்டு பலமாகத் தாக்கி விட்டது. அவர்களுக்கு உதவியாக ஆகாய மார்க்கமாக கிளைடர்கள் மூலமாகவும் குடைகள் மூலமாகவும் படைகள் இறங்கி முக்கியமான படைகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டன. 48 மணிகளுக்குள் மாண்ட்காமரி எம்மரிக்கிலிருந்து செயின்பர்க் வரையிலுள்ள 30 மைல்கள் கொண்ட பிரதேசத்தைப் பிடித்து விட்டார். இனிமேல் ரைன் போன்ற இடையூறுகள் மாண்ட் காமரிக்கு இல்லை. கெஸ்ஸல்ரிங் எல்ப் நதிக்கரையில் நின்று போராடக்கூடும். ஆகிலும் எல்ப் நதியும், வெஸர் நதியும், எம்ஸ் நதியும் மகத்தான இடையூறுகளாக இருக்க முடியாது.

மூன்று நாட்களுக்குள் மாண்ட்காமரி எட்டு பாலங்களைக் கட்டி விட்டதாகத் தெரிய வருகிறது. முக்கியமான ரஸ்தாக்கள் வழியாக கவசம் பூண்ட படைகள் செல்லட்டுமென்று நினைத்து பிரிடிஷ் இரண்டாவது சேனை வயல் காடுகளிலும் சில்லரை ரஸ்தாக்கள் வழியாகவும் முன்னேறி வருகிறது. முன்னேறும் வாசல்கள் வழியாக இப்பொழுது பிரிடிஷ் டாங்கிகளும், காலாட் படைகளும் ஏராளமாகக் குவிக்கப்படலாம்.

வி வி வி வி வி

**உலகப்புகழ்.** உலகம் பூராவும் மாண்ட்காமரியைப் பாராட்டி வருகிறது. ரைன் நதிப் பிரதேசத்திலிருந்து வரும் அமெரிக்க அறிக்கைகளில் மாண்டிக்கு ஈசன்ஹவருடன் சமமான கௌரவம் அளிக்கப்படுகிறது. நியூயார்க் டைம்ஸ் பின்வருமாறு எழுதியிருக்கிறது. "மாண்ட்காமரியின் தற்போதிய தாக்குதல் மிகவும் மகத்தானது. அவர் தரத்திலும், சங்கியையிலும் அதிகமான படைகளுடன் போர் புரிந்து வருகிறார். பிரெஞ்சு பத்திரிகையான ஆன்ரோரி பின் வருமாறு எழுதுகிறது. "மற்ற எந்த நாட்டையும் விட பிரிடன் யுத்தத்துக்கு அதிகப்பேருதவி செய்திருக்கிறது. ஒவ்வொரு சிற்றுண்டி சாலையிலும் தேனீர்க் கடையிலும் வயது முதிர்ந்த சர்ச்சிலுக்கோ அல்லது மாண்டிக்கோ ஆசிகூறி வருகிறார்கள்."

வி வி வி வி வி

**மேற்குப் போர்முனையின் வீழ்ச்சி.** ஜெர்மனிக்கு பிரிடிஷ் படைகளிருக்கும் போர்முனையில் மட்டும்தான் இகழ்ச்சி ஏற்பட்டதென்று எண்ண வேண்டாம். ஜனவரி 29-ம் தேதிக்கும் மார்ச்சு மாத முடிவுக்கும் இடையில் பாட்டனின் மூன்றாவது சேனைமட்டும் ஜெர்மன் பூமியில் 6,484 சதுர மைல்களையும், 3072 நகரங்களையும் கிராமங்களையும் கைப்பற்றியிருக்கிறது. 140,112 பேர்களைக்கைது செய்திருக்கிறது. சரித்திரத்தில் இவ்விதமான அரிய சேவை ஒருபொழுதும் நடைபெற்றதில்லை.

அமெரிக்க 9-வது, 1-வது சேனைகள் பாட்டர் பார்னுக்கருகில் லிப்ஸ்டாட்டில் ஒன்று சேர்ந்துவிட்டன. அமெரிக்க 7-வது சேனையும் பிரெஞ்சு 1-வது சேனையும் ஸடேயரில் ஒன்று சேர்ந்துவிட்டது. இதன்மூலம் ரூர் துணிக்கப் பட்டுவிட்டது. 4,800 சதுர மைல்களுக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள 40,000, அல்லது 80,000 ஜெர்மானியர்கள் வளைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

ஹாட்ஜாஸ் எடரையும் பாட்டர்பார்னையும் பிடித்திருக்கிறார். அமெரிக்க 3-வது சேனை புல்டாவைத் தாண்டியபின் கெஸ்ஸலை வளைத்து வருகிறது. பிரெஞ்சுப் படைகள் பேயன் என்ற ஜெர்மன் மாகாணத்திற்குள் முன்னேறி வருகிறார்கள். கனேடியர்களின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் ஜெர்மானியர்கள் ஹாலந்திலிருந்து பூராப் படைகளையும் பின்வாங்கி வருகிறார்கள். கூடிய சீக்கிரத்தில் V. 2 குண்டுகள் புறப்படும் நிலையங்கள் மீட்கப்படும். குண்டுவீச்சும் ஓய்ந்துவிடும்.

இப்பொழுது நேசதேசப் படைகள் ஹாலந்திலிருந்து ஸ்ட்ராஸ்பர்க் வரையில் பரவியிருக்கின்றன. ரைன் நதி ஜெர்மனியின் கையிலிருந்து நழுவி விட்டது. மேற்குப் போர்முனை நொருங்கி விட்டது. நேசதேசப் படைகள் பயந்து ஓடும் குழி முயல்களைத் துறத்துவதுபோல் ஜெர்மன் படைகளைத் துறத்திவருகிறார்கள். பின்பற்றிச் செல்ல சாதகமாக ஜெர்மானியர்கள் சிலாக்கியமான ரஸ்தாக்களை அமைத்திருக்கிறார்கள்.

வி வி வி வி வி

**பிற்போக்கு.** •நியூ யார்க் டைம்ஸ் பின்வருமாறு எழுதுகிறது. "ஹிட்லர் உலகத்தின் பேரில் ஏவிய அபோகாலிப்ஸின் நான்கு குதிரை வீரர்களும் திரும்பி வந்து விட்டார்கள். பிறர் நாடுகளுக்கு ஹிட்லர் ஏற்படுத்துவதாக உத்தேசித்த தீங்குகள் ஜெர்மனியைச் சூழ ஆரம்பித்துவிட்டன."

நியூஸ் கிரானிகள் பின்வருமாறு எழுதுகிறது. "ஜெர்மனியின் விதி 5-D-க்களை ஒட்டியிருக்கிறது, அதாவது வித்தியாசம், ஒற்றுமைக்குறைவு, அழிவு, நம்பிக்கைக்குறைவு, சிதைவு. இந்த விவரம் ஆடம்பரமாக இருந்தாலும, அது உண்மையை உரைக்கிறது.

வி வி வி வி வி

**விமான நடவடிக்கை.** மார்ச்சு மாதத்தில் பிரிடிஷ் விமானப் படை 76,500 டன்கள் மொத்த எடையுள்ள வெடி குண்டுகளை ஜெர்மனிபேரில் மணிக்கு சராசரி 90 டன்கள் வீதம் வீசியிருக்கிறது. அமெரிக்க 8-வது விமானப் படை மணிக்கு 90 டன்கள் வீதம் 26 நாட்கள் வரையில் வீசியிருக்கிறது. மார்ச்சு 24-ம் தேதியன்று 1,750 வெடி விமானங்களும், 1,250 சண்டை விமானங்களும் மாண்ட்காமரி ரைன் நதியைத் தாண்டியபொழுது வெடி குண்டுகளை வீசின. அமெரிக்க

பறக்கும் கோட்டை விமானங்களும், லிபரெடார்களும் இந்த மாதத்தில் 28,500 தடவை பாய்ந்து சென்றன. சண்டை விமானங்கள் 16,400 தடவை பாய்ந்து சென்றன. புள்ளி விபரங்கள் மனோரஞ்சிதமாகத்தான் இருக்கின்றன.

வி வி வி வி வி

**கிழக்குப் போர்முனையில்.** தெற்குப் பகுதியில் நான்கு படைகள் முன்னேறி வருகின்றன. (1) மாலினோவஸ்கி டான்யூப் நதியின் வடக்குக் கரை ஓரமாக முன்னேறி வருகிறார்; (2) மோலியராவ்ஸ்கியினுடையவும் டால்பூகினுடையவும் ஒன்றுபட்ட படைகள் அந்த நதியின் தெற்குக் கரை வழியாக வினர்ஸ்யூஸ்டாட்டை நோக்கி முன்னேறுகின்றன; (3) டால்பூகினின் படைகள் தெற்குக் கோடியில் டிரிஸ்டிவியன்னா இருப்புப்பாதையிலுள்ள கிராஸை நோக்கி முன்னேறுகின்றன; (4) பாலடினுக்குத் தென்மேற்கிலுள்ள டால்பூகினின் படைகள் சாக்ரப், டிண்டி வழியாக வடக்கு இதாலிக்குச் செல்லும் ரஸ்தா மார்க்கமாக யூகோஸ்லாவியாவின் வடகிழக்கு எல்லைச் சரகத்துக்கு முன்னேறுகின்றன.

இந்த நடவடிக்கைகளில் அநேகம் வெற்றிகள் கிடைத்திருக்கின்றன. வினர்ஸ்யூஸ்டாட் பிடிபட்டது. ருஷ்யப் படைகள் வியன்னாவுக்கு 10 மைல்களுக்குள் வந்துவிட்டன. பிராடிஸ்லாவாவுக்குப் போகும் மார்க்கத்தில் போர் மூண்டுவிட்டது. வடக்கு கோடியில் கிட்னியாவும் டான்சிக்கும் விழுந்துவிட்டன.

வி வி வி வி வி

**பெர்லின்.** பெர்லின் விமானங்களால் இடைவிடாது தாக்கப்படுகிறது. ஜெர்மன் நிர்வாகம் அதைவிட்டுக் கிளம்பி குறிப்பிடப்படாத இடத்திற்குச் சென்றுவிட்டது.

**நம்பிக்கையின்மை.** ஜெர்மனியின் ஒவ்வொரு பிரசாரத்திலும் நம்பிக்கையின்மை தொனிக்கிறது. ஜெர்மன் ராணுவ அதிகாரிகளின் பிரமுகரான டிட்மார் "போரை இன்னும் தொடர்ந்து நடத்துவது புத்திசாலித்தனமா" என்று கேட்கிறார். சாதாரணமான ஸோல்ஜர் எல்லாவற்றையும் இழந்தபின்னும் முஸ்தீப்புகள் ஒன்றும் இல்லாதபொழுதும் போரை நடத்துவது மிகவும் கேவலம் என்று அபிப்பிராயப்படுகிறார்.

வி வி வி வி வி

**நேசநேச பிரகடனங்கள்.** ஜெனரல் ஈசன்ஹவர் அநேக பிரகடனங்களை வெளியிட்டு ஜெர்மன் ஸோல்ஜர்கள் எவ்விதம் சரணடையவேண்டுமென்றும் ஜெர்மன் பொதுமக்கள் எவ்வித நடவடிக்கையை எதிர்பார்க்கலாமென்றும் புகட்டி வருகிறார். நேசதேசத்தார்கள் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளில் நாஸி தத்வமும், ராணுவ அதிகாரமும் நிர்மூலமாக்கப்படுமென்று ஈசன்ஹவர் சொல்லிவருகிறார். விடுதலை பெற்ற நாடுகளிலுள்ள ஜெர்மானியர்கள் நேசதேச ஆக்ஷி அநீதியும் வஞ்சமும் உள்ளதாக இல்லை என்று காண்கிறார்கள். ஆகிலும் நேசதேசத்தார்கள் கோபம் கொள்ளுவதற்கும் ஆத்திரப்படுவதற்கும் போதுமான முகாந்திரம் உண்டு.

வி வி வி வி வி

**சிதைவு.** ஜெர்மன் நிர்வாகம் ஜெர்மனியின் பெரும் பாகத்தின் பேரில் அதிகாரத்தை இழந்துவிட்டது. அத்துடன் ஜெர்மனி பல இடங்களிலுள்ள அதன் படைகளுடனும் தொடர்பை இழந்துவிட்டது.

வி வி வி வி வி

**சச்சரவுகள்.** ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் இனிமேல் யுத்தத்தை நடத்த இயலாதென்றும் சரணாகதி செய்துவிடவேண்டுமென்றும் ஹிட்லரிடம் சொல்லிவிட்டார்கள்.

வி வி வி வி வி

**சமாதானப் பேச்சுகள்.** ஹிட்லர் தூதர்களை அனுப்பி சமாதானம் செய்துகொள்ள முயற்சிக்கிறான் என்றும் வதந்திகள் உலாவுகின்றன.

வி வி வி வி வி

**கொலை.** ஹிம்லரின் கெஸ்டாபோ ஏஜண்டுகள் என உடையணிந்த மூன்று ஸோல்ஜர்கள் ஆகனின் மேயரைக் கொன்றுவிட்டதாகத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. மேயர் நேசதேசத்தாரிடம் உத்தியோகத்தை ஏற்க ஒப்புக்கொண்டதுதான் அதற்குக் காரணமாம். இனிமேல் நாஸிகள் இவ்விதமான போரைத்தான் நடத்துவதாக நடத்திவருகிறார்கள். ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள நேசதேசத்தார்களை கீழறுப்பான் வேலைமூலம் கொடுந்துன்பத்துக்குள்ளாக்குதல், நேசதேச நிர்வாகத்தை

நடத்த ஒத்தாசை செய்யும் துரோக புத்தியிலுள்ள பொதுஜனங்களைக் கொலை செய்வதுதான் அவர்களின் முறைகள். ஹிட்லர் பெர்கஸ்காடனுக்கு மகாண கவர்னர்களை அழைத்து ஆக்கிரமிப்பு நாடுகளில் எவ்விதம் கலவரம் செய்வதென்று போதனைசெய்து வருவதாகவும், சொல்லப்படுகிறது, ஜெர்மானியர்கள் எப்பொழுதும் பயங்காளிகள்.

வி வி வி வி வி

**அசட்டு தைரியம்.** ஆகிலும் நாஸிகள் அடிபணிய மாட்டார்கள். தொழிலாளர்களின் தலைவரான ராபர்ட் லே ஜெர்மானியரிடம் 20 மிலியன் சேனைகளிருக்கின்றனவென்றும் சொல்லுகிறார். "கஷ்ட சாத்யமாக இருந்த போதிலும் நாம் தீரத்துடன் போரை நடத்தவேண்டும்" என்று கோயபல்ஸ் ஓலமிடுகிறான்.

வி வி வி வி வி

**விஷமத்திற்கு திட்டம்.** விஷமம் செய்ய நாஸிகள் இன்னும் திட்டம் போட்டு வருகிறார்கள். மேற்குப் போர்முனையில் படு தோல்வி ஏற்பட்ட பின்னரும் இப்போர்முனையை பலப்படுத்தாமல் கிழக்குப் போர்முனையில் ஜெர்மனி படைகளைக் குவித்துவருகிறதென்பது விந்தையாக இருக்கிறது. இதன் அருத்தமென்ன? கிழக்கு, மேற்குப் போர்முனைகளிலுள்ள சேனைகள் பெர்லின் பிராந்தியத்தை அணுகும் பொழுது ஒன்றுபட்ட எல்லாப் படைகளையும் எதிர்த்துப் போர் புரிவதாக உத்தேசித்திருக்கிறார்கள் போலும். ஸ்டெட்டினுக்கும் செக்கோஸ்லாவேக்கியா எல்லைச் சரகத்திற்கும் மத்தியில் 100 டிவிஷன்களுக்கு மேற்பட்ட ஜெர்மன் படைகள் குவிந்திருப்பதாகச் சொல்லப் படுகிறது.

ஆனால் அதன் முடிவு எப்படியிருக்கும். ஹிட்லர் எண்ணுவதுபோல நிச்சயமாக இருக்காது. ஒவ்வொரு மணியும் ருஷ்யப்படைகளுக்கும் பிரிடிஷ்—அமெரிக்கப் படைகளுக்கும் இடையிலுள்ள வெளி குறுகி வருகிறது. எந்த இடத்தில் படைகள் சந்திப்பதென்பதை நிர்ணயிக்க குறுகலான மார்க்கங்களைக் கண்டு பிடிப்பதற்காக தேச படங்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டு வருகின்றன. தாமதத்திற்குக் காரணம் சர்ப்பராக்களைக் கொண்டுவருவதற்கும் படைகள் சிரமப் பரிகாரம் செய்துகொள்ளுவதற்கும் அவகாசம் வேண்டியதினாலே அல்லாது எதிரியின் நடவடிக்கையல்ல. பிரிடிஷ், அமெரிக்கப் படைகள் ஜெர்மனிக்குள் முன்னேறும் பொழுது சரணாகதி செய்வதற்கு யாதொரு சேனைத் தலைவருமில்லை என்று அவைகள் காண்கின்றன. பொறுப்புள்ள தலைவரில்லாமல் ஜெர்மன் சேனை சிதைவுற்றிருக்கிறது. ஆகையால் இரண்டு நேசதேசப்படைகளும் சந்தித்துவிட்டால் யுத்த நிறுத்தம் செய்யும் தருணத்தை அவர்கள் முடிவு செய்துவிடுவார்கள். இந்தக் காரணத்தினால்தான் ஈஸ்டர் விடுமுறையின்பொழுதும் பிரிடிஷ் மந்திரிகள் எளிதில் கூடும்படியான நிலைமையில் சமீப தூரத்தில் வசித்து வருகிறார்கள். எந்த நேரத்திலும் யுத்த நிறுத்தம் பிரகடனம் செய்யப் படும். ஆகிலும் தூக்குத் தூக்கான போர் நடைபெறக்கூடும்.

வி வி வி வி வி

**வடக்கு இதாலி.** வடக்கு இதாலி, பிரெஞ்சு-இதாலிய எல்லைச் சரகத்திலும் பிரென்னர் கணவாயிலும், ஆஸ்திரியாவிலும், யூகோஸ்லாவியாவிலும் குண்டு வீசுவதென மூலமாக துணிக்கப்படுகிறது. ஹிட்லருக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியில் இதாலியிலுள்ள படைகள் வந்தால் உதவியாக இருக்கும். ஆனால் அவன் இஷ்டப்பட்டாலும் பின்வாங்கிக்கொண்டு போக முடியவில்லை. சென்ற எட்டு மாதங்களாக நேசதேச விமானங்கள் வடக்கு இதாலியை முற்றுகை செய்திருக்கின்றன. அதன் மூலம் இதாலியிலுள்ள படைகளுக்கு சர்ப்பராக்களைக் கொண்டுபோவதும் தடைபட்டு விட்டது, அவைகள் பசியால் வாடி மடியவேண்டும் அல்லது சரணாகதி செய்ய வேண்டும்.

வி வி வி வி வி

**பஸிபிக் பிராந்தியம்.** இங்கு சுறுசுறுப்பு அதிகரித்து விட்டது. பிலிப்பைன்ஸ் தீவுகளில் படைகள் புதிய இடங்களில் இறங்கிவிட்டன. இந்த வாரத்தில் ஜப்பானுக்கு 250 மைல்களுக்கு சமீபத்திலுள்ள ரெயூகியூஸ் தீவுக் கூட்டங்களைச் சேர்ந்த ஒகினுவாவில் படைகள் இறங்கின. இந்த நடவடிக்கைக்கு ஒத்தாசையாக பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த விமானந் தாங்கிகளால் சென்ற விமானங்கள் அந்தத் தீவுக் கூட்டத்தின் தெற்குக் கோடியிலுள்ள ஸாகிஷிபாஸிலிருந்த தற்காப்புகளை வெடி குண்டுகள் வீசி நொருக்கின. ரெயூக்யூஸ் தீவுகள் சைனாவிலிருந்து ஜப்பானுக்கு சங்கிலிக் கோர்வைபோலிருக்கின்றன. இப்பொழுது படைகளிறங்கியதிலிருந்து ஜப்பானிலும் சைனாவிலும் படையெடுக்க சாதகம் ஏற்படும்.

வி வி வி வி வி

**பர்மா.** மத்ய பர்மாவில் நேசதேசப்படைகள் முன்னேறி வருகின்றன. கியான்ஸ்கி—மிஞ்சான்—மெயிக்டிலா முக்கோணத்தில்தான் போர் நடைபெறுகிறது. கியான்ஸ்கி விழுந்துவிட்டது.

பர்மா கொஞ்சம் கொஞ்சமாக விடுவிக்கப்படுவதினால் பழைய நிர்வாகமும் அமைக்கப்பட்டுவருகிறது. 400-க்கு மேற்பட்ட பொதுஜன ஆபீஸர்களும், 10 வைத்திய ஆபீஸர்களும் அநேக இஞ்ஜினியர்களும், மாஜி நிர்வாக உத்யோகஸ்தர்களும் திரும்பிவந்துவிட்டார்கள். 54 வைத்தியசாலைகளும் 26 ஆஸ்பத்திரிகளும் திறக்கப்பட்டுவிட்டன.

வி வி வி வி வி

**சைனு.** ஜப்பான் ஒன்பதுநாள் போரை நடத்தியபின் அமெரிக்கர்கள் ஹாங்கோவுக்கு வடமேற்கில் 200 மைல்களிலுள்ள லாஹோகெள என்னும் விமான தளத்தைக் காலிசெய்துவிட்டார்கள்.

வி வி வி வி வி

**ஆஸ்திரியா.** ஆஸ்திரியாவில் பொதுஉடமை கக்ஷியைச்சேர்ந்த ஐவர்களும், தாராளக் கக்ஷியைச் சேர்ந்த ஒருவரும் கக்ஷிப் பற்றற்ற ஒருவரும் கொண்ட ஸீரோ என்று நாமம் பூண்ட ஒரு சபையின் கண்காணிப்புக்குட்பட்ட ஒரு பெரிய கிழறுப்பான் இயக்கம் துவக்கமாகிவிட்டது. அவர்கள் நாஸிகளை எதிர்த்து நேசதேசத்தார்களுடன் உறவை நாடிவிட்டார்கள்.

வி வி வி வி வி

**சான்பிரான்ஸிஸ்கோ.** சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டுக்கு பிரதிநிதிகளை அனுப்புவதில் சில தகசல்கள் கிளம்பியிருக்கின்றன. ருஷ்யாவின் அயல்நாட்டு மந்திரிகளுக்கு பதிலாக வாஷிங்டனிலுள்ள ருஷ்ய தூதர் மகாநாட்டிற்குச் செல்லுவார். தனக்கு மூன்று ஓட்டுகள் வேண்டுமென்றும் இன்னும் அங்கிகாரம் செய்யப்படாத லப்ளின் போலீஷ் கமிட்டிக்கு ஒரு ஓட்டு வேண்டுமென்றும் ருஷ்யா வற்புறுத்துகிறது. தனக்கும் மூன்று ஓட்டுகள் வேண்டுமென்று வற்புறுத்திய அமெரிக்கா அதனுடைய கோரிக்கையை வாபஸ் பெற்றுவிட்டது. லப்ளின் கமிட்டிக்கு பிரதிநித்வம் வேண்டுமென்ற ருஷ்ய கோரிக்கையை பிரிடனும் அமெரிக்காவும் நிராகரித்துவிட்டன. ஐரோப்பாவிலுள்ள சிறிய தேசங்கள் தங்களுடைய பாத்தியங்களைக்கொண்டாடுகின்றன. பிரான்ஸும், சைனுவும் அவைகளை ஆதரிக்கும் என்றும் அவைகள் எதிர்பார்க்கின்றன.

---

## ஐரோப்பியப் பொருளாதாரத்தைத் திரும்பி அமைப்பது.

(W. N. ஈயர்).

ஐரோப்பாவில் பொருளாதார பிரச்னைகள் மிகுதியாக மேலோங்கி நிற்கின்றன. விடுதலை பெற்ற நாடுகளிலுள்ள மிகவும் நெருக்கடியான உள்நாட்டு ராஜீய பிரச்னைகள் பொருளாதார சிரமங்களை முழு மனதுடனும், திறமையுடனும் தீர்த்து வைக்கக்கூடிய நிர்வாகங்களை அமைப்பதில்தான் நிலைத்திருக்கின்றன.

எங்கு பார்த்தாலும் இந்தப் பிரச்னை மூன்று வகைகளாக இருக்கிறது. அவசியமான உணவுப்பொருள்களையும், இயற்கைப் பொருள்களையும் நேசதேசத்தார் சேமித்து வைத்திருக்கும் ஐச்வரியங்களிலிருந்து வழங்குவது. உடன் காலத்தில் தேவைகளுக்கு போக்குவரத்து சாதனங்களைத் தருவது. விநியோகம் செய்வதற்கு உள்நாட்டில் தகுதியுள்ள ஸ்தாபனத்தை அமைப்பது. பாழாக்கப்பட்ட நாடுகள் தன்னந்தனியே நிலைத்திருப்பதற்காக விவசாயம், தொழிற்சாலைகளைத் திரும்பியும் அமைப்பது.

பிரிடனும், அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளிலுள்ள பொதுமக்களின் தேவைகளை நன்கு கவனித்து வருகிறார்கள். ஸப்ளைகளை அனுப்புவதற்காக பிரிடனிலுள்ள மூலாதாரப் பொருள்கள் குறைக்கப்படுகின்றன. போர்ப் படைகளின் அவசியத்தைப் பொருட்படுத்தாமலும் கப்பல்கள் இந்தத் தேவைக்கு அனுப்பப்படுகின்றன.

பிரெஞ்சு, பெல்ஜிய அதிகாரிகளுடன் கலந்து ஆலோசிப்பதற்காக மிஸ்டர் ஆட்லி பாரிஸுக்கும், பிரஸ்ஸல்ஸுக்கும் சென்றிருந்தார். அமெரிக்க நிர்வாகத்தின் சார்பாக ஜட்ஜ் ரோஸ்மான் லண்டனுக்கு வந்து பிரிடிஷ் சர்ப்பரா இலாகாக்களுடன் திட்டங்களை நிறுவி வருகிறார்.

அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதாக சின்னங்கள் காணப்படுகின்றன. பிரான்ஸில் ஜனவரியில் ஒரு வாரத்துக்கு 5,000 வாகன்களில் சாமான் சென்றதுபோக, பிப்ரவரியில் ஒரு வாரத்தில் 11,000 வாகன்களில் சாமான்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அத்யாவசியமான தேவைகளுக்கு வாரத்திற்கு 15,000 வாகன்கள்தான் அதம பக்ஷமானதென்று சொல்லப்படுகிறது. இப்பொழுது கிடைக்கும் உணவுப்பொருள் வைத்திய முறைப்படி அத்யாவசியம் என்று சொல்லக்கூடிய அளவுக்கும் குறைவாக இருக்கிறது.

ஆகிலும் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதில் இன்னும் அதிகமான சிரமங்களிருக்கின்றன. வெளி நாடுகளிலிருந்து வரும் ஸப்ளைகள் அதிகரிப்பது அவசியமென்பதுபோல், உள்நாட்டிலுள்ள நிர்வாகமும் அதிகத் திறமையுள்ளதாக இருக்கவேண்டும். ஆகிலும் மேற்கு ஐரோப்பிய நிலைமை ஒரு மாதத்திற்கு முன்னிருந்ததைவிட இப்பொழுது சிலாக்கியமாகத்தான் இருந்துவருகிறது. ஆகிலும் ஹாலந்தில் பஞ்சத்திற்குள்பட்ட நகரங்களில் மேற்கில் எங்குமில்லாதபடி மிகவும் கோரமான கஷ்டங்களை நாம் சமாளிக்க வேண்டியிருக்கும்.

மத்தியதரை பிரதேசத்தில் ஐக்கிய நாடுகளின் கஷ்ட நிவாரண, புனருத்தாரண சங்கம், கிரேக்க, இதாலிய நிர்வாகங்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுவிட்டது. ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து U. N. R. R. A. கிரீஸுக்கு சாமான்களை அனுப்பும் பொறுப்பை ராணுவ அதிகாரிகளிடமிருந்து எடுத்துக்கொள்ளும் ஒப்பந்தத்தில் நிறுவப்பட்ட விதிகளின்படி கிரேக்க நிர்வாகம் பொருள்களை விநியோகம் செய்துவரும்.

பாழடைந்துபோன ரூவன் துறைமுகத்தில் நின்றுகொண்டு ரூவனின் நகர பரிபாலன சபை மேயர் பின்வருமாறு என்னிடம் சொன்னதாக ஞாபகம் வருகிறது. "சுற்றிலும் பாருங்கள். இப்பொழுது நாம் ராஜ்யத்தைப்பற்றி கவனிக்கக்கூடிய தருணமில்லை."

துரதிருஷ்டவசமாக மேலே சொல்லிய புத்திசாலித்தனம் கிரீஸில் காணப்படவில்லை. அவர்கள் முன் நிற்கும் பொருளாதார, நிர்வாக பிரச்னைகளைத் தீர்க்காமல் ராஜ்ய சதிகளிலும் ஒத்திகைகளிலும் மந்திரிகள் கவனம் செலுத்தி வருகிறார்கள் என்று தோன்றுகிறது.

கஷ்ட நிவாரணம் என்பது ஐரோப்பாவின் பொருளாதார புனருத்தாரண பிரச்னையின் ஒரு அம்சம்தான். சாதாரண கால சர்வதேச வியாபாரத்தைத் திருப்பி அமைப்பது மற்றொரு விஷயமாகும். இத்துடன் இரண்டு ஒப்பந்தங்களும் முக்கியமான, மிதமான பேருதவிகளைச் செய்திருக்கின்றன.

நேசதேசத்தார்களுக்கும் ஸ்விட்ஸர்லாந்துக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் ஒரு அம்சத்தில் யுத்த நடவடிக்கைதான். சில விலக்குகளுடன், ஜெர்மனியின் சகலவிதமான வியாபார, செல்வ நிலை சம்பந்தமான ஒப்பந்தங்களை நிறுத்தி விடுவதாக ஸ்விஸ் நிர்வாகம் ஒப்புக்கொண்டுவிட்டது. இதே சமயத்தில் ஸ்விட்ஸர்லாந்துக்கும் நேசதேசத்தார்களுக்கும், மற்ற நடுநிலைமை வகிக்கும் வியாபார முறைகளை மறுபடியும் ஆரம்பிக்க நேசதேசத்தார்கள் ஏற்பாடு செய்து வருகிறார்கள். வியாபார முறையில் புனருத்தாரணம் ஏற்படுவதற்காக இது குறிப்பான நடவடிக்கையாகும்.

பிரிடனுக்கும், ஸ்வீடனுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் அமைப்பில் வேற்றுமையுள்ளதாக இருந்தபோதிலும் லக்ஷியத்தில் சமானமானதுதான். அதன் வக்கணைகள் செல்வ நிலைமையைப் பொருத்தவை, தயாரிப்புக்கான ஏற்பாடுகள் உள்ளவை. ராணுவ முறையில் கடல் மார்க்கங்கள் திறக்கப்பட்டவுடன் பிரிடனுக்கும், ஸ்வீடனுக்குமுள்ள வியாபாரம் மறுபடியும் ஆரம்பிக்கப்படும் என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது. பொருளாதார முறையிலும், ராஜீய முறையிலும் நாம் யுத்தத்தை மட்டும் நடத்தி வரவில்லை. சமாதானத்திற்கும் நாம் தயார்செய்து வருகிறோம்.

பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளில் சுய ஆக்ஷியை நோக்கி மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. இவ்விதமான நடவடிக்கை இருந்துவருகிறதென்று உலகத்தார் அறியவில்லை. சென்ற சில மாதங்களில் ஏற்பட்ட இரண்டு அபிவிருத்திகள் இந்த மாறுதலைப்பற்றி சில தோற்றங்களை வெளியிடுகின்றன.

அக்டோபர் மாதத்தில், மேற்கு ஆபிரிக்காவில் தங்க கடற்கரை குடியேற்ற நாடுகளில் அரசியல் நிர்வாகத்துக்கான சிபார்சுகளை ஆமோதித்து விட்டதாக குடியேற்ற நாடுகளின் காரியதரிசி வெளியிட்டார். இந்த சீர்திருத்தங்களின் பிரகாரம் ஒரு சட்டசபை அமைக்கப்படும். அதில் 6 உத்தியோகஸ்தர்களும், ஆறு நியமனம் செய்யப்பட்டவர்களும், 18 தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் அங்கத்தினர்களாக இருப்பார்கள்.

அடுத்தபடியாக 4,00,000 சதுர மைல்களும், 20 மிலியன் ஜனத்தொகையும், ஜாதி, மதம், பழக்க வழக்கம், சரித்திரம் முதலியவற்றில் மாறுபாடு உள்ளதுமான மேற்கு ஆபிரிக்க குடியேற்ற நாடான நைஜிரியாவில் சீர்திருத்தம் ஏற்படும்.

நைஜிரியா சம்பந்தமாக பெரும்போக்கான மாறுதல்கள் ஏற்படக்கூடும். மத்திய சட்டசபையிலும், உள்நாட்டு நிர்வாகத்திலும் சபைகளுக்கு அதிகமான உரிமைகள் கொடுக்கப்படவேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகிறது. சபைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆபிரிக்க பிரதிநிதிகள் பெரும்போக்கான கக்ஷியுள்ளவர்களாக இருப்பார்கள்.

இந்த மாறுதல் மூலம் தங்க கடற்கரையிலும் நைஜிரியாவிலும் உள்ள ஜனங்களுக்கு நாட்டின்யோக க்ஷேமத்தை நடத்துவதில் உண்மையான பங்கு அளிக்கப்படும். பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளிலுள்ள எல்லா ஆபிரிக்க ஜனங்களின் பூர்ணமான சுய ஆக்ஷிக்கு இது முற்போக்கான நடவடிக்கையாக இருக்குமென்று நம்பப்படுகிறது.

# உலகத்தில் உணவுப்பொருள் குறைவு.

## நேசநாட்டாரின் அலுவல்.

### (டைம்ஸ் பத்திரிகை).

ஐரோப்பாவில் கூடிய சீக்கிரத்தில் ஜெர்மனி என்ற எதிரி மறைந்து விடுவான். ஜெர்மானியர் பின் வாங்கிவிட்டுப்போகும் இடங்களில் உணவுப் பொருள், ஆடைகள், வாசஸ்தலம் முதலிய பிரச்னைகள் தோன்றக்கூடும்.

பிரான்ஸ், பெல்ஜியம், மேற்கு ஹாலந்திலுள்ள ஜனங்களின் துயரங்கள் உலகத்தாரை திடுக்கிடும்படி செய்து விட்டன. போலந்து உள்பட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இந்தக் கஷ்டம் இன்னும் அதிக கோரமாகயிருக்கிறது. தோல்வி பெறும் ஜெர்மானியர்களை பொசுக்கு வேலை செய்து வருவதினால் சீர்கேடு அதிகரித்து வருகிறது. அநேக இடங்களில் விவசாயமும் உணவுப் பொருள் உற்பத்தியும் நின்று போய்விட்டன. எங்கு பார்த்தாலும் போக்குவரத்துகள் காணப்படவில்லை. சேனைகளிருக்குமிடத்திலுள்ள பொது ஜனங்களுக்கு உதவி செய்வதற்காக, அதிகமான கசாயும், கொழுப்பும், மற்ற உணவுப் பொருள்களும் தேவையென்று ஜெனரல் ஈசன் ஹவர் உத்தரவிட்டிருக்கிறார். பிரிடனில் ஆபத்துக்காக சேமித்து வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருளிலிருந்து ஒரு சிறிது அனுப்பப்பட்டிருக்கிறது. அமெரிக்காவிலும் கசாய்ப் பங்கீடு குறைக்கப்படும். பிரிடனுக்குக் குத்தகைக் கடன் திட்டப்படி அனுப்பப்படும் கசாயும் விசேஷமாய்க் குறைக்கப்படும் அல்லது தாத்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும். பிரிடனுக்கு ஸப்ளை செய்யும் ஆர்ஜண்டினாவிலும் கசாய் இருப்பு மாடு நோயினால் குறைவுபடும்.

இந்தக் கஷ்டங்களை நிவாரணம் செய்வதற்காகத்தான் ஐக்கியதேச கஷ்ட நிவாரண புனருத்தாரண சங்கம் அமைக்கப்பட்டது. போர்முனையிலுள்ளவர்களுக்கு பொது ஜனங்களுக்குறிய சர்ப்பராககளும் அனுப்பப்பட்டது.

மேற்குப் போர்முனையிலும் கிழக்குப் போர்முனையிலும் ராணுவ அவசியத்திற்கான சாமான்கள், போக்குவரத்துகளின் உச்சநிலை ஏற்பட்டுவிட்டதென்றும், உணவுப்பொருளும், கப்பல்களும் மீதப்படவில்லையென்றும் பிரதம மந்திரி சொல்லியிருக்கிறார். உலகம் பூராவிலும் குறைவு ஏற்பட்டிருக்கிறது. சர்வதேசங்களின் பங்கீடும் கோட்டாக்களும் புதிய அபாயத்தை நிவர்த்திக்க முகான்மையளிக்கவேண்டியதற்காகத் திருத்தி அமைக்கப்படவேண்டும். பாழான ஒவ்வொரு நாட்டிலும் உணவுப் பொருள், துணிமணியை உற்பத்தி செய்யும் சக்தியையும் வாசஸ்தலத்தை அமைப்பதையும் துரிதமாகத் திரும்பவும் அமைத்தால்தான் ஐரோப்பா காப்பாற்றப்படும்.

---

# சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் உலகத்தின் கவனம் ஊன்றிநிற்கிறது.

## சாச்வதமான சமாதான சாஸனம் தேவை.

### (விக்ஹாம் ஸ்டீட்).

ஐரோப்பிய யுத்தம் கூடிய சீக்கிரத்தில் முடிந்துவிடும் என்பதினாலும், ஜப்பானுடன் நடைபெறும் போரில் நேசதேசத்தார்கள் வெற்றிக்கு மேல் வெற்றி பெற்று வருவதினாலும், சர்வதேசங்களும் கூடும் சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டுக்கு விசேஷ கௌரவம் ஏற்படுகிறது.

தெற்கு ஆபிரிக்காவின் பிரதம மந்திரியான பில்ட் மார்ஷல் ஸமட்ஸ் அதில் கலந்து கொள்ளுவதென்று முடிவு செய்திலிருப்பதிலிருந்தும். அதன் முக்கியத்வம் வெளிப்படுகிறது. 1919-ம் வருஷத்தில் பாரிஸில் சமாதான மகாநாடு நடைபெற்றபொழுது சர்வதேசங்களின் ஒப்பந்தத்தை நிறுவின ராஜதந்திரிகளில் பாக்கியிருப்பவர் அவர் ஒருவர் தான். அமெரிக்க ஜனாதிபதியான வில்ஸன் தான் சர்வதேச சங்கத்தின் ஸ்தாபகர் என்று கருதப்பட்டாலும் அவரும் ஸமட்ஸ் எழுதி வைத்திருந்த திட்டத்தைத் தான் ஒப்புக்கொண்டார்.

சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் டம்பார்டன் ஓக்ஸ் மகாநாட்டின் யோஜனைகளுக்கும் கிரிமியா மகாநாட்டின் முடிவுகளுக்கும் ஒரு உருவான அமைப்பை ஏற்படுத்தினால் மற்றொரு உலக யுத்தம் மூளாதென்று ஸமட்ஸ் நம்புகிறார்.

இது மனித வர்க்கத்தின் சரித்திரத்திலேயே ஒரு முக்கியமான தருணம் என்றும் அவர் சொல்லுகிறார். யுத்தம் வேறற்றுப்போனதாகச் செய்துவிடாத போனால் எதிர் காலம் அளவிட முடியாதபடி கோரமாக இருக்குமென்றும் அவர் நம்புகிறார். அவ்விதம் செய்யாவிடில் இப்பொழுது கையாளப்படும் நாசமுறைகளைவிட அப்பொழுது இன்னும் அதிகமான முறைகள் கையாளப்படும். விஞ்ஞான சாஸ்திரிகள் இது விஷயமாக அநேக ரகசியங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

சான்பிரான்ஸிஸ்கோவுக்குப் போகுமுன் லண்டனில் நடைபெறும் பிரிடிஷ் சாம்ராஜ்ய பிரதிநிதிகள் கூட்டத்திற்கு பீல்ட் மார்ஷல் ஸமட்ஸ் விஜயம் செய்வார். கடற்படை சம்பந்தமான பிரச்னைகளையும், பஸிபிக் கடல் சம்பந்தமான பிரச்னைகளைத் தீர்க்க மகாநாடு கூடுமுன் 1921-ம் வருஷத்தில் நவம்பர் மாதத்தில் இது போன்ற மகாநாடு வாஷிங்டனில் கூடிற்று. அந்த மகாநாடும் பிரிடிஷ், சாம்ராஜ்ய நாடுகளின் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பினால் தான் வெற்றிகரமாக முடிந்தது. சான்பிரான்ஸிஸ்கோவிலும் இவ்விதமான ஒத்துழைப்பு அமெரிக்க பிரதிநிதிகளுடன் ஒற்றுமையை வளர்ச்சி செய்யும், உலக பத்திரத்துக்கான திடமான அமைப்புக்கும் அஸ்திவாரம் போடக்கூடும்.

சில சிரமங்கள் தீர்க்கப்படவேண்டும். போலந்துக்கு பிரதிநிதித்வம் கொடுப்பது ஒன்று. கிரிமியா மகாநாடு முடிவு செய்த பிரகாரம் தேசிய ஒற்றுமையுள்ள தாத்காலிக போலிஷ் நிர்வாகத்தைப் பற்றி ஒரு விதமான ஒப்பந்தமும் ஏற்படவில்லை. லண்டனிலுள்ள போலிஷ் நிர்வாகமும், போலந்திலுள்ள தற்போதிய தாத்காலிக நிர்வாகமும் யுத்தத்தில் ஜெர்மன் அட்டூழியத்திற்கு முதல் பலியான போலிஷ் தேசத்தை சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் பிரதிநிதித்வம் செய்யப் போதுமான அதிகாரமும் மதிப்பும் பெற்றிருக்கவில்லை. ஆகையால் இந்த பிரச்னையைத் திருப்திகரமாகத் தீர்த்து விடுவதுதான் முக்கியமான பிரச்னையாகும்.

ருஷ்ய அயல் நாட்டு மந்திரியும் பிரிடிஷ், அமெரிக்க தூதர்களும் மாஸ்கோவில் இதைப் பற்றி விவாதித்து வருகிறார்கள். அந்தப் பிரச்னை முடிந்தவுடன் பிரிடிஷ் சாம்ராஜ்ய பிரதிநிதிகளும் குடியேற்ற நாடுகளின் பிரதிநிதிகளும் அமெரிக்க, ருஷ்ய பிரதிநிதிகளுடன் ஒன்றுபட்டு, டம்பார்டன் ஓக்ஸ் யோஜனைகளை உலகத்துக்கு நிரந்தரமான சமாதானத்தைத் தரும் சாஸனமாக மாற்றிவிடுவார்கள்.

---

## சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டைப்பற்றிய ஹேஷ்யங்கள்.

(M. உல்ப்).

யால்டாவில் நிருவப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அநேக நடவடிக்கைகள் பின் திரையில் காணப்படுகின்றன. யால்டா முடிவுகளில் உடன் காலத்தில் அமுலுக்குக் கொண்டு வரக்கூடிய சிலவற்றை நிறைவேற்ற பிரயத்தனம் செய்யப்படுகிறது. இதே சமயத்தில் சான்பிரான்ஸிஸ்கோவில் நடை பெறப்போகும் நேசதேச மகாநாட்டிற்கும் ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

உலக பத்திர சம்பந்தமாக முற்போக்கான சர்ச்சைகளை நடத்த லண்டனில் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் கூடுவார்கள். அயல்நாட்டு காரியதரிசி கிளாஸ்கோவில் பின் வருமாறு சமீப காலத்தில் சொற்பொழி வாற்றினார்.: "சான்பிரான்ஸிஸ்கோவில் மற்ற ஐக்கிய தேசங்களுடன் கலந்து கொள்ளுமுன் ஒருவர் மற்றொருவருடைய அபிப்பிராயங்களைப் பூராவாக அறிந்து கொள்ளுவதற்காக லண்டனில் சாம்ராஜ்ய நாடுகள் சமீபத்தில் கூடுமென்று நினைக்க நான் சந்தோஷிக்கிறேன். சுதந்திரத்தை ரக்ஷிக்க அஸ்திவாரம் போட சான்பிரான்ஸிஸ்கோ மகாநாடு ஒப்பற்ற சந்தர்ப்பத்தை அளிக்கிறது.

டச்சு அயல் நாட்டு மந்திரியான மிஸ்டர் வான் கிளப்பன்ஸ் பாரிஸில் நடத்திய சம்பாஷணை மூலம் டச்சுக்காரர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் உள்ள வித்யாசங்கள் தெளிவு பட்டு விட்டன. இன்னும் சில அம்சங்களில் அதாவது உலக பத்திர சபையில் வோட்டிங் முறையில் அபிப்பிராய பேதங்கள் இருந்து வந்தாலும் பொதுவான உலக பத்திர ஸ்தாபனத்திற்குட்பட்டு சில வட்டாரங்களில் ஒப்பந்தம் செய்து கொள்ளுவது முக்கியத்வமுள்ளதென்று இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுவிட்டன.

ஜனவரியில் வெளியிட்ட விளக்கக் குறிப்பில் டச்சு நிர்வாகம் பொதுப்படையான உலக பத்திரத்தைப் பற்றி அதன் அபிப்பிராயத்தை வெளியிட்டு விட்டது. சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டுக்குச் செல்லும் டச்சு கோஷ்டியின் தலைவராகச் செல்லும் மிஸ்டர் வான் கிளப்பன்ஸ் இந்த அபிப்பிராயத்தை அங்கு விவரித்துச் சொல்லுவார்.

பிரிடன், அமெரிக்கா, ருஷ்யா, சைனாவுக்கு அனுப்பியுள்ள விளக்கக் குறிப்பில் டம்பார்டன் ஓக்ஸ் மகாநாட்டின் உலக பத்திர திட்டங்களுக்கு திருத்த பிரேரணைகளை பிரெஞ்சு தாத்காலிக நிர்வாகம் அனுப்பியிருக்கிறது. பிரான்ஸும் சில வட்டாரங்களில் ஒப்பந்தம் செய்து கொள்ளுவது அவசியமென்று வற்புறுத்துகிறது. இந்த லக்ஷியத்துடன், டம்பார்டன் ஓக்ஸ் மகாநாட்டில் குறிப்பிடப்பட்டதை விட அதிகமாக அரசாட்சிக்கு வரையறைகளை ஏற்படுத்த ஜெனரல் டிகாலின் தாத்காலிக நிர்வாகம் தயாராக இருக்கும்.

மேலும் உலக பத்திர கவுன்ஸிலில் நிரந்தரமாக இல்லாத சர்வதேச ஒழுங்கு முறையைப் பரிபாலிப்பதில் சுறுசுறுப்பாக பங்கெடுத்துக்கொள்ளும், நாடுகளுக்குத் தான் வழங்கப்படவேண்டுமென்று ஹாலந்து யோசனை கூறுவதையும் பிரெஞ்சுக்காரர்கள்

ஆமோதிக்கிறார்கள். பொருளாதார, ஜன சமூக பிரச்னைகளிலும் கவுன்ஸிலின் சக்தி விரிவாக இருக்க வேண்டுமென்றும் அவர்கள் யோசனை கூறுகிறார்கள்.

சான்பிரான்ஸிஸ்கோ நடவடிக்கைகள் ரஸமுள்ளதாக இருக்குமென்பதிலும் நேசதேச நாடுகளின் பிரதிநிதிகள் அநேக முக்கியமான பிரச்னைகளைத் தீர்க்கவேண்டுமென்பதிலும் யாதொரு சந்தேகமும் இல்லை.

---

## ருஷ்யாவுக்கு புதிய ஸப்ளை மார்க்கம்.

டார்டனல்ஸ், பாஸ்பரஸ் வழியாக, கடல் மார்க்கமாக போக்குவரத்து மறுபடியும் ஆரம்பமாகிவிட்டதிலிருந்து ருஷ்யாவுக்கே புதிய ஸப்ளை மார்க்கம் திறக்கப்பட்டுவிட்டது.

டார்டனல்ஸ், பாஸ்பரஸ் என்ற குறுகலான கடல் மார்க்கம் ஜலசந்தி என்று எல்லோராலும் அழைக்கப்படுகிறது. சரித்திரத்தில் ராணுவம், ராஜீயம், வியாபாரம், அழகு, புராணம் முதலிய அம்சத்தில் இதற்கு ஒப்பாக இங்கிலீஷ் கால்வாயையும் சொல்லமுடியாது. ஐந்து நூற்றாண்டுகளாக அது துருக்கி வசம் இருந்தது. ஆட்டமான் சாம்ராஜ்ய நாளில் அது உள்நாட்டுப்போக்குவரத்து மார்க்கமாக இருந்தது.

இந்த ஜல சந்தியில் இப்போதும்கூட துருக்கிக்கு ஆதிக்கம் இருந்தபோதிலும் அது சர்வதேச ஒப்பந்தமான மாண்ட்ரியூ ஒப்பந்தப்படிக்கு 1934-ம் வருஷம் ஜூலை மாதம் 20உ அன்று சில நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டது. அதன் பிரகாரம் வியாபாரக் கப்பல்கள் சமாதான காலத்தில் ஜலசந்தியில் போகலாம். 10,000 டன்களுக்கு மேற்பட்ட யுத்தக் கப்பல்களும், நீர்மூழ்கிகளும், விமானந் தாங்கிகளும் அதன் வழியே செல்லக்கூடாது. மற்றக்கப்பல்கள் அதன் வழியாக பகலில் செல்லலாம். யுத்த சமயத்தில் துருக்கி நடுநிலைமை வகித்தால் போரில் ஈடுபட்டிருக்கும் நாடுகளின் கப்பல்கள் அதன் வழியே செல்லக் கூடாது. சர்வதேசங்களும் நடவடிக்கை எடுத்துக்கொண்டாலும் அல்லது துருக்கி உடைந்தையாக உள்ள ஒப்பந்தப்படி நடவடிக்கை ஏற்பட்டாலும் யுத்தக் கப்பல்கள் அதன் வழியே செல்லலாம். துருக்கி யுத்தத்தில் கலந்து கொண்டால் துருக்கியை எதிர்த்துப் போராடும் நாடுகளின் சாமான் கப்பல்களும் எதிரிக்கு உதவி அளிக்கும் முறையில் மனிதர்களையும் தளவாடங்களையும் கொண்டுபோகும் நடுநிலைமை வகிக்கும் நாடுகளின் கப்பல்களும் அதன் வழியே செல்லக்கூடாது.

### டார்டனல்ஸ் மறுபடியும் திறக்கப்பட்டது.

ஜலசந்தி வழியாக போக்குவரத்து மறுபடியும் ஆரம்பிக்கப்பட்டதை துருக்கியிலுள்ள பத்திரிகைகள் ஏகோபித்து வரவேற்றன. மர்மான்ஸ்க்குக்கு ஆர்டிக் கடல் வழியாக சாமான் கப்பல்களை கொண்டுபோவதினால் நேசதேசத்தாருக்கு ஏற்படக்கூடிய சிரமங்களும் காலதாமதமும் நஷ்டமும் குறைந்துவிடுமென்றும் ருஷ்யாவுக்கு சாமான்கள் துரிதமாகக் கிடைத்துவிடுமென்றும் எல்லாப்பத்திரிகைகளும் வெளியிடுகின்றன. டானின் பத்திரிகையில் எம்யால்சின் பின்வருமாறு எழுதியிருக்கிறார். "ருஷ்யாவுக்கு யுத்த தளவாடங்களை கொண்டுபோவதுதான் இறுதி வெற்றி பெறுவதற்கு பேருதவி செய்யும். அதுதான் நமக்குத் திருப்தியை அளிக்கிறது," கருங்கடல் கரையிலுள்ள நாடுகளுடன் வியாபார வசதிகள் அதிகரிக்கும் என்று வாகித் என்னும் பத்திரிகையில் அஸீம்யூஸ் விளக்கியிருக்கிறார். ஜலசந்தி வழியாக ருஷ்யாவுக்கு சாமான்களை அனுப்புவதினால் பாஸ்ரா வழியாக சாமான்களை அனுப்புவதிலுள்ள பாதிதூரம் குறைந்துவிடும் என்று ஸன்போஸ்டர் பத்திரிகையில் எக்கம் ஊசாக்ளிக்கில் எழுதியிருக்கிறார்.

### துருக்கிய வியாபார சுறுசுறுப்பு.

துருக்கிக்கும் இது விசேஷ லாபமுள்ளது. யுத்த அபாயம் துருக்கியிலிருந்து நீங்கிவிட்டது. துருக்கியிலுள்ள வியாபார ஸ்தலங்களில் திருப்தி ஏற்பட்டது. வெகு நாளாக செயலற்றிருந்த கப்பல் நிலயங்களில் சுருசுறுப்பு ஏற்பட்டிருக்கிறது. எகிப்து, பாலஸ்தீனம் கிரீஸ் மற்ற தூரதேச நாடுகளுக்கு கப்பல் எப்பொழுது புறப்படும் என்று விசாரணைகள் அவ்வாபீஸில் செய்யப்படுகின்றன. அயல் நாடுகளிலிருந்து துருக்கி ஆர்டர் செய்திருந்த சாமான்கள் துருக்கிக்கு அனுப்பப்பட்டு விட்டன என்று துருக்கியிலுள்ள வியாபாரிகளுக்கு தந்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அநேக சமான்களின் விலைகள் திடீரென்று குறைந்துவிட்டது என்று சொல்லப்படுகிறது. பிரிடனிலிருந்து ஏராளமான துணிமணிகள் துருக்கியில் வியாபார ஸ்தலங்களுக்கு வந்துவிட்டன.

### ஸ்மர்னாவில் சுறு சுறுப்பேற்பட்டுவிட்டது.

இஸ்டான்புல் துறைமுகத்தை ருஷ்யர்களும் பல்கேரியர்களும் ருமேனியர்களும் போக்குவரத்துக்கு உபயோகப்படுத்திவருகிறார்கள். மத்யதரைக் கடலில் போக்குவரத்து முன் இருந்த நிலமைக்கு வந்துவிட்டாலும் ஸ்விஸ் கப்பல்களில் மார்ஸேல்ஸிலிருந்து துருக்கிக்கு

சாமான்கள் வந்துகொண்டிருக்கின்றன. வெகு சீக்கிரத்தில் சருக்கிக் கப்பல்கள் இஸ்டான் பூலிலிருந்தும் இஸ்மிரிலிருந்தும் மார்ஸேல்ஸுக்கும் மற்ற மத்திய தரைக்கடலிலுள்ள துறை முகங்களுக்கும் செல்லக்கூடும். வியாபாரம் அதிகரித்திருக்கிறது என்பதற்கு அறிகுறியாக ஒரு முக்கிய வியாபார கோஷ்டி இங்கிலாந்து சென்றிருக்கிறது.

---

# மெக்கானே கருவிகளைப்போல் சாதாரணமானது.

## பெய்லிபாலம் யுத்தத்தின் அற்புதமான புதியசாதனம்.

எதிரி பாலங்களை நாசம் செய்து விட்டாலும் நேசதேசப்படைகளுக்கு பெரிய நதிகளும் இந்த யுத்தத்தில் இடையூறுகளாக இல்லை என்பதற்கு பிரிடிஷ் இஞ்சினியர்களின் சாமர்த்தியம் முக்கியமாக பெய்லி பாலங்களை உற்பத்தி செய்வதுதான் காரணமாகும்.

ரைன் நதியின் 1,000 கெஜங்கள் அகலமுள்ள இடங்களை படகுகளின்மூலம் தாண்டி விடலாம். இதே படகுகள் மூலம்தான் மாண்டலேக்கு வடக்கிலும் தெற்கிலும் 1,000 கெஜம் அகலமுள்ள ஐராவதி நதியை பிரிடிஷ் படைகள் தாண்டின. 400 கெஜம் அகலமுள்ள காப்ளன்ஸ் போன்ற இடங்களில் நதியைத் தாண்டுவதற்கு பெய்லி பாலம் சுலபமானது. காப்ளன்ஸில் பாலத்தை ஜெர்மானியர்கள் ஒரு சிறிதுதான் தகர்த்திருந்தார்கள்.

பெய்லி பாலத்தை அமெரிக்கப் படைகள் போர்ப்படைகளுடன் செல்லும் ஒரு சாதகமாக எடுத்துச்சென்றார்கள். அதன் திட்டமும் செஞ்சேனைக்கும் அனுப்பப்பட்டது.

யுத்த ஆரம்பத்தில் இருந்த ராணுவப்பாலங்கள் 20-பங்குக்கு சற்று அதிகமான டன்கள் எடையுள்ள பாரத்தை சுமக்கக்கூடியதாய் இருந்தது. பிரிடிஷ் டாங்கிகளின் பரிமாணம் அதிகரித்ததாலும் டாங்கிகளை ஏற்றிச் செல்லும் சாதனங்களை பாலஙகளின் பேரில் கொண்டு போக வேண்டியிருந்ததாலும் கனமான பாலங்களை கட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆகிலும் பாலங்களின் பாகஙகளை மைனர்கள்தான் கட்டவேண்டியிருந்தது. ஒரு கியாதி பெற்ற பிரிடிஷ் சிவில் இஞ்சினியரான டொனல்டு கோல்மேன், பெய்லி, அவர் பெயர் கொண்ட ஒரு பாலத்தைக் கட்டினன். இப்பொழுது உபயோகிக்கப்படும் இந்தப் பாலத்திற்கு அவர் பிரிடனுக்கு நெருக்கடியாக இருந்த 1940-ம் வருடத்திலேயே அவர் அறைகுறையான திட்டங்களைப் போட்டிருந்தார். 4½ மாதத்திற்குள்ளாக ஒரு பாலம் கட்டி முடிக்கப்பட்டு அது பரீக்ஷை செய்யப்பட்டது. அமைப்பின் சௌலப்யம் யாதெனில் எதிரியால் பழுது செய்யப்பட்ட எந்தப்பாகத்தையும் தாத்காலிகமாக படகுகளால் ஈடு செய்யப்படலாம். நதிப் போக்குவரத்துக்கும் அவைகளை அப்புறப்படுத்திவிடலாம். லேசான டாங்கிகள் செல்லுவதற்காக ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட ஓர் பாலத்தை கனமான டாங்கிகள் செல்லுவதற்கு லாயக்குள்ளதாகவும் பிறகு அமைத்துவிடலாம்.

இந்தப் பாலத்தை ஸாப்பர்ஸ்கள் பகலிலும் இரவிலும் கட்டி விடுவார்கள். பர்மாவில் சிண்ட்வின் நதியில் காலீவாவிற்கு அருகில் அமைக்கப்பட்ட மிகவும் நீளமான பெய்லி பாலம் பகலிலும் இரவிலும் கட்டப்பட்டது. லாரிகளின் தலைவிளக்குகள் வெளிச்சத்துக்காக உபயோகப்படுத்தப்பட்டன. 1,250 அடி நீளமுள்ள இந்தப் பாலத்தின் பாகங்கள் தனித் தனியாக கட்டப்பட்டு குறிப்பிடப்பட்ட ஸ்தலத்திற்கு ½ மைல் தூரம் நதி மார்க்கமாகக் கொண்டுபோகப்பட்டன. அதற்கு வேண்டிய தளவாடங்கள் பிரிடனிலுள்ள தொழிற்சாலைகளிலிருந்தும் அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கும் கொண்டுவரப்பட்டு அதன்பின் பர்மாவுக்கு 300 மைல்கள் தாண்டி கொண்டு போகப்பட்டன.

### யுத்தத்துக்குப்பின் உபயோகங்கள்.

பாலத்தைத் துரிதமாகக் கட்டிவிடலாமென்பதற்கு இதாலியில் ட்ரிக்னே நதியின் குறுக்கே 300 அடி நீளமுள்ள பாலம் 36 மணிகளில் அமைக்கப்பட்டதென்பது உதாரணமாகும்.

நூற்றுக்கணக்கான பெய்லி பாலங்கள் டுனீஷியா, இதாலி, பிரான்ஸ், ஹாலந்து, பர்மா முதலிய நாடுகளில் நேசதேசத்தாருக்குக் கிடைத்த வெற்றிகளுக்கு பேருதவி செய்திருக்கின்றன.

சர்வ தேச ராணுவ அதிகாரிகளும் இந்தப் பாலத்தை அதிகமாக ஸ்தோத்ரம் செய்திருக்கிறார்கள். இதுவரையில் கட்டப்பட்டதில் இதுதான் மிகவும் சிறந்ததென்று பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரி சொல்லுகிறார்.

யுத்தத்தின் வெற்றிக்கு உதவும் பெய்லி பாலம் படகுகளில் மெதுவாக தாண்டப்படக் கூடிய நதி மார்க்கங்களால் துண்டிக்கப்பட்ட நகரங்களும் கிராமங்களும் உள்ள உலகத்திலுள்ள அபிவிருத்தி அடையாத பாகஙகளின் போக்குவரத்துகளைத் துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கு யுத்தத்திற்கு பின்னும் அதிக சாதனங்களை அளிக்கும்.

# ஒரு வெடி விமானம் மூன்று பேர்களின் வேலையைச்செய்து வருகிறது.

(E. கோல்ஸ்டன் ஷெப்பர்ட்).

1942-ம் வருஷத்தில் இரு இரவில் 1,000 வெடி விமானங்கள் கொலோனைத் தாக்கியபின் தற்பொழுது உள்ள பிரிடிஷ் பாம்பர் கமாண்டின் நடவடிக்கையை கவனித்தால் அது 200 சதவிகிதம் அபிவிருத்தியடைந்திருக்கிறதென்று தெரியவரும். அதாவது மூன்று வருஷங்களுக்குமுன் 1,000 விமானங்களால் ஏற்பட்ட விளைவை இன்று 300 விமானங்கள் சாதித்துவிடும். இந்தக் காலவரையில் கனமான பிரிடிஷ் வெடி விமானங்கள் 100 சத விகிதம் அதிகமான வெடிகுண்டுகளை ஏற்றிச் சென்றிருக்கின்றன.

ஆகிலும் அபிவிருத்திக்கு அதுமட்டும் காரணமில்லை. வெடிகுண்டுகள் லக்ஷியத்தைத் தாண்டி விழுந்தால் நான்கு டன்கள் அல்லது 2 டன்கள் குண்டுகளை ஏற்றிச் சென்றாலும் யாதொரு பிரயோஜனமும் இல்லை. மேலும் நாசத்துக்குத் தகுதியான வெடிகுண்டு இல்லாவிடில் எவ்வளவு வெடிகுண்டுகளை ஏற்றிச் சென்றாலும் பயன்படாது. ரயில்வண்டிகள் நிற்குமிடங்களை நொருக்கக்கூடிய 1,000 ராத்தலுள்ள வெடிகுண்டுகள், பறக்கும் குண்டுகளை சேமித்து வைத்திருக்கும் இடங்களில் ஒரு விளைவையும் உண்டுபண்ண முடியாது. அதே விதமாக 12,000 ராத்தலுள்ள ஒரு வெடிகுண்டை ரயில் வண்டிகள் நிறுத்தப்படும் இடத்தில் போட்டால் அது வியர்த்தமாகப் போய்விடும். ஆகிலும் டிர்பிட்ஸ் போன்ற யுத்தக் கப்பலை மூழ்கடிக்க அவ்வளவு கனமான வெடிகுண்டுதான் தேவைப்படும்.

பலவகைப்பட்ட லக்ஷியங்களுக்குத் தகுதியான வெடிகுண்டுகளும், அதன் அபிவிருத்தியும் விமானப்படையின் பொருமையினாலும், முயற்சியினாலும் ஒரு விஞ்ஞான சாஸ்திர முறையை அடைந்துவிட்டன. உதாரணமாக, ஆராய்ச்சி செய்துவரும் மாணவர்கள் ஜெர்மன் வெடிகுண்டுகளை இரண்டு மடங்கு அதிக கனமுள்ளதாக அமைத்தார்கள். அதிகமான எறிவெடி சாமான்களைக் கொண்டுபோவதற்காக அவைகள அவ்விதம் அமைக்கப்படவில்லை. ஆனால் பிரிடனைவிட ஜெர்மனியில் அதிக கெட்டியான கூரைகளைத் துளைப்பதற்காக அதிக கனமான எறிவெடிகள் அமைக்கப்பட வேண்டியிருந்தது.

ஒரு சாமான் பேரில் பட்டவுடன் பன்னிரண்டு துணுக்குகளாகச் சிதறும் 20 ராத்தல் வெடிகுண்டை அமைத்த அமெரிக்காவின் புத்திசாலித்தனமும் அனுபவமும் துருப்புகளைத் தாக்குவதற்கு வெடிகுண்டுகளைத் தயார் செய்ய பிரிடனில் உபயோகிக்கப்பட்டது. குறிப்பிட்ட லக்ஷியங்களைத் தாக்குவதில் எந்த ரகக் குண்டுகள் உபயோகமுள்ளவை என்ற அனுபவம் பிரிடிஷ் விமானப்படைக்குக் கிடைத்திருப்பதுபோல் வேறு ஒன்றுக்கும் கிடைத்திருக்காது. இதன் மூலமாகவே அதிக சிக்கனம் ஏற்பட்டிருக்கிறது. மற்ற அபிவிருத்திக்கும் அது அஸ்திவாரம் போன்றது. விமானங்கள், சில பெரிய வெடி குண்டுகளையோ, அநேகம் சிறிய வெடி குண்டுகளையோ அல்லது இருவகைப்பட்டவைகளையோ, சமயத்துக்குத் தக்கவாறு ஏற்றிச்செல்ல அமைக்கப்பட்டவை. அதிக சக்தி உள்ளதாகவும், புறப்படுவதற்கு அதிக வசதியும் அமைக்கப்பட்டிருப்பதால் அவைகள் குறிப்பிட்ட எண்ணெயுடனும் அதிகமான வெடிகுண்டுகளை ஏற்றிச் செல்ல வசதி பெற்றிருக்கின்றன. இதற்குப் பிறகு அபிவிருத்தியடைந்திருக்கும் வெடி குண்டுகளின் திறமை நடவடிக்கையைப் பொருத்ததாகும்.

இரண்டு வருஷங்களாக வெடிகுண்டு வீச்சை குறிதவறாமல் நடத்த பிரிடிஷ் பாம்பர் படைகள் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்து வருகின்றன. இந்தக் காலம் பூராவிலும் அமெரிக்க 8-வது விமானப்படை பிரிடிஷ் பாம்பர் கமாண்டுடன் மிகவும் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தியிருந்தது. அதன் நிலைமையை உயர்த்தும் பரிக்ஷையிலும் அது பாம்பர் கமாண்டுடன் அடிக்கடி ஒத்துழைத்து வந்திருக்கிறது.

இந்த இரண்டு கனமான வெடி விமானப்படைகளும் குறிதவறாமல் அடிப்பதில் வெவ்வேறு முறைகளைக் கையாண்டு வருகின்றன ஆகிலும் இரண்டு படைகளும் மற்ற படையின் முறைகளையும் அனுபவத்தையும் நன்கு அறிந்து வருகின்றன. ஒரு அம்சத்தில் பிரிடிஷ் பாம்பர் படை அமெரிக்க விமானப் படையின் நடைமுறையைப் பின்பற்றிவிட்டதென்றே சொல்லலாம். தனிப்பட்ட வெடி விமானங்கள் சென்று லக்ஷியத்தைக் கண்டுபிடித்து வெடிகுண்டுகளை வீசுவதென்பதை அது இப்பொழுது ஆதரிக்கவில்லை.

அமெரிக்க திட்டப்படி வெடி விமானங்கள் லக்ஷியத்தைத் துலக்கிக்காட்டும் விமானங்களுக்குப் பின் செல்லும். அவைகள் அடையாளம் காட்டிய உடன் வெடி விமானங்கள் குண்டுகளை வீசும். பிரிடிஷ் விமானப்படை தனிப்பட்ட விமானம் தாக்குவதைக் கவனிப்பதற்கும், விமானங்களுக்கு போதனை அளிப்பதற்கும், வெடிகுண்டு வீசுவதற்கு உத்தரவுகளைப் போடுவதற்கும் தலைமை வகிக்கும் ஒரு வெடி விமானத்தை உபயோகிக்கிறார்கள். கடற்படை போரை நடத்தும் அட்மிரலும் போர்முனை பூராவையும் அதில் ஈடுபட்டிருக்கும் படைகளையும்

கவனிக்கக்கூடிய ஒரு இடத்திலிருந்து ஒரு படையின் தாக்குதலை நடத்திவரும் ஒருதரைப் படை ஜெனரலும் சேர்ந்து அமைக்கப்பட்ட ஒருவராக மாஸ்டர் வெடி விமானத்திலிருந் திருப்பவர் நடந்து கொள்ளுவார். கடைசித் தருவாயில் அவர் தாக்குதல் முறையைத் திருத்தியிருக்கிறார். நிலைமையில் ஏற்பட்ட மாறுதலின் காரணமாகவோ அல்லது சில தவறான அபிப்பிராயத்தினாலோ அவர் கடைசித் தருவாயில் விமான நடவடிக்கையே கூடா தென்றும் சொல்லியிருக்கிறார்.

மாஸ்டர் பாம்பர் இருக்கும்பொழுதுதான் கனமான வெடி விமானத் தாக்குதலின் அமைப்பு உச்ச நிலைமையை அடைந்திருக்கிறது. அதற்கு உதவியாக விமானத்தை நடத்த விஞ்ஞான சாஸ்திர முறையில் உதவியும், திருஷ்டி கோசரமாகாத லக்ஷியங்களைக் கண்டு பிடிப்பதற்கு உதவியும் கிடைத்திருக்கின்றன. மேலும் விஞ்ஞான சாஸ்திரப்படி ஆகாயத் திலிருந்தும் தரை பேரிலும் சுளுந்துகளை வீசுவதன் மூலம் லக்ஷியங்களும் கண்டுபிடிக்கப் படுகின்றன. இந்தச் சுளுந்துகளைப் போட்டு லக்ஷியங்களைக் கண்டுபிடிப்பதில் லக்ஷியத்தைத் துலக்கிக் காட்டும் படைகளுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மாஸ்டர் வெடி விமானிதான் இந்த நடவடிக்கைகளிலிருந்து உயர்தரமான லாபம் கிடைக்கும்படியாகச் செய்யும் ஒன்றுபடுத்தும் சக்தி. வெடிகுண்டுகள் லக்ஷியத்தின் பேரில் விழவேண்டுமென்றும் மற்ற வெடிகுண்டுகள் வீணுகப் போகாமல் மற்ற இடங்களில் போடப்படவேண்டுமென்றும் மாஸ்டர் விமானிதான் பார்த்துக் கொள்ளவேண்டும்.

பிரிடிஷ் பாம்பர் படையிலும் அமெரிக்க 8-வது விமானப்படையிலும் இரண்டு வருடங் களுக்கு முன் இருந்த வெடிவிமானங்களுக்குக் குறைவே இல்லை. ஆனால் அவைகள் இரண்டு வருஷங்களுக்கு முன்னிருந்ததைவிட மூன்று மடங்கு அதிகமான நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடும். 3,000 வெடி விமானங்கள் அப்பொழுது செய்த வேலையை இப்பொழுது 1,000 வெடி விமானங்கள் செய்து முடித்துவிடும். இந்த உச்ச நிலைக்கு, அநேக வருஷங்களாக பக்தி சிரத்தையுடன் எடுத்துக்கொண்ட உழைப்புத்தான் காரணமாகும்.

---

## ஜப்பானுக்கான போருக்காகத் தயாரிப்பு.

### நுட்பமான விமர்சனம்.

(கிராகான் ஸ்டான்போர்ட்).

(டெயிலி மெயில் பத்திரிகையின் லெயிடியிலுள்ள நிருபர்).

சென்ற சில நாட்களில் பஸிபிக் பேரில் 500 மைல்கள் பறந்து சென்று வடக்கு ஆஸ்திரேலியாக் கடற்கரையிலிருந்து பிலிப்பைன்ஸுக்கு ஜப்பானியர்கள் பின்வாங்கிய முறை களைக் கவனித்தேன். ஜப்பானுக்கான போரை நடத்தச் செய்யப்பட்டிருக்கும் தயாரிப்பை யும் கவனித்தேன்.

ஜெனரல் மாக் ஆர்தரும் கடற்தளபதி நிமிட்ஸூம் மேற்கொண்ட கிடுக்கித் தாக்குதல் மூலம் நேசதேசப்படைகள் ஜப்பானின் உள்வளைர தற்காப்புத் தீவுகளைத் தாக்கும் தூரத்திற்கு வந்துவிட்டன. இறுதித் தாக்குதல் எப்பொழுது ஏற்படுமென்று ஒருவரும் சொல்ல முடியாது. ஆயினும் இந்தக் கிடுக்கியின் இரு புஜங்களும் ஜப்பானிய சாம்ராஜ்யத்தின் வாசற் படியைத் தொட்டுவிட்டன. நேசதேச வசமாகியிருக்கும் ஒவ்வொரு தீவிலும் பஸிபிக் போரில் D தினத்தை எதிர்பார்த்து ஏராளமான படைகளும் தளவாடங்களும் குவிக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு துறைமுகத்திலும் ஜப்பானைத் தாக்குவதற்காக ஒரு கமாண்டுக் குட்பட்டு பஸிபிக்கில் சஞ்சரிக்கும், அமெரிக்க, பஸிபிக் கடற்படைகளுக்கு சர்ப்பராக்களை வழங்குவதற்காக பல ரகக் கப்பல்கள் நின்றுகொண்டிருக்கின்றன.

ஆயுதசாலைகள் போலிருந்த தீவுகளைப் பார்வையிட்டேன். ஆகாயத்தில் விமானங்கள் வட்டமிட்டுக்கொண்டிருக்கின்றன. வெடிவிமானங்கள் சப்தம் மறைந்தபின் 20 புல்டோஜர் யந்திரங்கள் செவியைத் துளைக்கும் சப்தத்துடன் விமான தளத்தில் வேலை செய்து வருவதைக் கேட்கலாம். அந்த விமான தளத்தில் அபாரமான போக்குவரத்து நடை பெறுகிறது.

இதற்கு முன் நடைபெற்ற போர்களுக்கும் இதற்கும் வித்தியாசமுண்டு. இங்குள்ள கால அளவுக்கும் தூரத்துக்கும் இணையே கிடையாது. உலகத்திலேயே மகத்தான சமுத் திரம் தான் போர்க்களம். போர்முனைகள், தீவுகள், பவளக்கொடிகள் உள்ள குன்றுகள், 1,000 மைல்கள் இடைவெளியுள்ளவை. இந்தப் போரில் வெற்றிபெற வேண்டுமானல் போர்முனைகளிடையே உள்ள தூரத்தை வெகு சீக்கிரத்திலும் ஏராளமான மனித பலத் துடனும் தளவாடங்களுடனும் தாண்டிவிட வேண்டும். வெற்றி கிடைக்குமுன் எதிரியை நிர்மூலமாக்கவேண்டுமென்பதில்லை. இப்பொழுது நேசதேசத்தாரின் மகத்தான தளங்களாக இருக்கும் தீவுகளில் அநேக ஆயிரக்கணக்கான ஜப்பானியர்கள் இருந்துவருகிறார்கள். அமெ ரிக்கர்கள் ஜப்பானியர்களைத் அடைக்கும் வேலையை ஒத்திப் போட்டுவிட்டார்கள்.

# பஸிபிக்கில் புதிய தந்திரம்.

## மாக் ஆர்தரின் யுத்த முறை.

### கடற்தளபதி R. M. கோல்வின்.

ஜப்பானுடன் நடைபெறும் போரில் எதிர் பார்த்ததற்கு அதிகமாக முன்னேற்றம் ஏற்பட்டதற்குக் காரணமான கடற்தளபதி நிமிட்ஸ், ஜெனரல் மாக் ஆர்தரின் யுத்த தந்திரம் யுத்த சரித்திரத்தில் நூதன முறையாகும். அல்லது பழமையான கொள்கையை புதிய முறையில் கையாண்டதாகும்.

1939-ம் வருஷத்திற்குப் பின் எல்லாப் போர்முனைகளிலும் சாத்தியமான வரையில் தரைப்படை, கடற்படை, விமானப்படைகள் ஒன்றுபட்ட கமாண்டுக்குட்பட்டுப் போர் புரிய வேண்டுமென்றும் அடிப்படையான கொள்கையை நாம் கற்றுக்கொண்டிருக்கிறோம். இந்தக் கொள்கை பஸிபிக் போரில் பூராவாகக் கையாளப்பட்டது. சில முக்கியமான புதிய மாறுதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

பஸிபிக் போரானது கடல் மார்க்கங்களில் ஆதிக்கம் பெற கடற்படையை மட்டும் உபயோகப்படுத்தியதை பொருத்திருக்கவில்லை. அந்தப் போரில், கடற்படை பலமும் தரைப் படைகளும், விமானப் படைகளும் ஒன்றுபட்டு ஈடுபட்டிருந்தன. இந்த தந்திரத்திற்கு விமானந்தாங்கிகள் உள்பட ஏராளமான கப்பல்களும் விமானங்களும், ஒரு சிறிது தரைப் படைகளும் தேவைப்படும்.

இந்தப் போர் பிராந்தியத்தில் இழந்த தேசத்தை மீட்கவேண்டியது அவசியமில்லை என்று நாம் முக்கியமாகக் கண்டுபிடித்திருக்கிறோம். தளங்களை விமான மூலமாகவும் கப்பல்களின் மூலமாகவும் தாக்கி அவற்றைக் கைப்பற்றினால் போதும். அபாரமான நஷ்டத்துடனும், காலச் செலவுடனும் எதிரியைத் துடைத்துவிடவேண்டுமென்ற அவசியம் கிடையாது.

பெர்ல் துறைமுக நடவடிக்கைக்குப் பின், ஜப்பானியர்கள் அலைகள் போல் முன்னேறிய பொழுது இவ்விதமான முறைகளைக் கையாள நேசதேசத்தார்கள் சக்தியற்றிருந்தார்கள். அந்த ஜப்பானிய அலை எவ்விதம் பொங்கி பின்பு அடங்கிவிட்டதென்று பார்ப்போம்.

முதல் தடங்கல் அதற்கு பவளக்கடல் போரில் ஏற்பட்டது. நியூகினியாவிலுள்ள படைகளுக்கு உதவி அனுப்பவேண்டுமென்று அஜாக்கிரதையுடன் ஜப்பான் செய்த முயற்சியை விமானந்தாங்கிகளில் சென்ற விமானங்கள் முறியடித்தன. இந்த அமெரிக்க வெற்றியால் காப்பாற்றப்பட்ட ஆஸ்திரேலியர்கள் ஒரு எல்லைச் சரக ஸ்தானத்தில் தீரத்துடன் நிலைத்து நின்றார்கள். அந்த ஸ்தானத்துடன் ஜப்பானியர்களின் முன்னேற்றத்துக்கு முற்றுப்புள்ளி ஏற்பட்டுவிட்டது.

யுத்தப்போக்கில் மாறுதல் ஏற்படும் நிலைமை ஏற்படுவதற்கு முன் ஜப்பானியர்களின் குறவளைப் பிடிப்பு தளர்த்தப்படவேண்டும். அதைத் தளர்த்துவதற்கு அமெரிக்க, ஆஸ்திரேலியப் படைகள் வேலை செய்வதற்கான தளங்கள் அமைக்கப்படவேண்டும். ஹானலூலு, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து தவிர பாக்கித் தீவுகளை நாம் இழந்துவிட்டோம். அவைகளும் வெகு தூரத்திலிருந்து வந்தன. முன்னணி தளங்களை நாம் சம்பாதித்துக்கொள்ளவேண்டியிருந்தது. இத்துறையில் அமெரிக்கர்கள் முயற்சி எடுத்துக்கொண்டார்கள்.

ஜப்பானியர்கள் தெற்கு நோக்கிச் சென்றதில் கிடைத்த வெற்றியைக்கொண்டு மதிமயங்கி, கிழக்கு நோக்கி முன்னேறினார்கள். பெர்ல் துறைமுகம், ஹானலூலு நடவடிக்கைக்கு சரிக்கட்ட அவர்கள் மிகவும் பலமான துணைக்காவல் படைகொண்ட கடற்படையை ஹானலூலுக்கு மேற்கில் 1,500 மைல்களிலுள்ள மிட்வேத் தீவுகளுக்கு அனுப்பினார்கள். அங்கு நடைபெற்ற கடற்போரில், இதில் பெரும்பாலும் விமானங்கள் ஈடுபட்டன. ஜப்பானியக் கடற்படை பலமாக முறியடிக்கப்பட்டு, அபாரமான நஷ்டத்துடன் பின்வாங்க நேரிட்டது. இதுதான் ஜப்பானுக்கு முதல் முதலில் ஏற்பட்ட பலமான தோல்வி. யுத்த தந்திர முறையிலிருந்து இது மிகவும் பலமான பிற்போக்காகும். ஏனெனில் இதற்குப் பின் ஜப்பானின் கிழக்கு பார்ச்வம் பலஹீனப்பட்டு சுலபமாகத் தாக்கும் நிலைமையை அடைந்துவிட்டது. ஆகிலும் ஆஸ்திரேலியாவிலும், நியூஸிலாந்திலும் இருந்த அமெரிக்க, ஆஸ்திரேலியப் படைகளுக்கு ஏற்பட்டிருந்த அபாயம் நீங்கிவிடவில்லை. ஆஸ்திரேலியாவுக்கு வடமேற்கிலுள்ள தீவுகளிலிருந்து ஜப்பானியர்களை அப்புறப்படுத்தும் வரையில் இந்த அபாயம் இருந்தே தீரும். இந்த பிரதேசத்திற்குத் திறவுகோல் போன்றது குடால்கனர் தீவுதான். இங்குதான் ஜப்பானியர்கள் முதல்தரமான விமான தளத்தைக் கட்டியிருந்தார்கள். இந்தத் தீவை ஆக்கிரமிப்பதற்காக கடலிலும் தரையிலும் ஏராளமான போர்கள் நடைபெற்றிருக்கின்றன.

குடால்கனல் நேசதேச வசமானவுடன் அமெரிக்காவுக்குச் செல்லும் கடல் மார்க்கங்களும் விமான மார்க்கங்களும் பத்திரமாகிவிட்டன. இப்பொழுதுதான் ஜெனரல் மாக் ஆர்தர் நடவடிக்கைகளை ஆரம்பித்து, கடற்கரையிலுள்ள ஒவ்வொரு முனையாகக் கைப்பற்றி, தீவுத் தீவாகத் தாவி, ஜப்பானியப் படைகளைத் துணித்து, நியூகினியாவையும் மற்ற சுற்றுப்புறங்களிலுள்ள தீவுகளையும் கைப்பற்றி, வடமேற்கை நோக்கி முன்னேற வழியையும் திறந்துவிட்டார். இப்பொழுதுதான் ஜெனரல் மாக் ஆர்தரும் கடற்தளபதி நிமிட்ஸூம் தங்களுடைய புதிய தந்திரத்தைக் கையாண்டார்கள். கடைசியில் அவர்களுக்குக் கப்பல்களும், விமானங்களும், சர்ப்பராக்களும் கிடைத்துவிட்டன. ஒரு பிரதேசத்தைச் சுற்றியுள்ள வட்டாரத்திலுள்ள கடற்கரை, ஆகாயப்படை நிலயங்களில் ஆதிக்கம் பெறுவதுதான் அவர்களின் யுத்த தந்திரம். ஆனால் அந்த வட்டாரத்துக்குள் அகப்பட்ட பிரதேசத்தைக் கைப்பற்றுவதில்லை.

உதாரணமாக, நியூகினியாவில் கடற்கரையிலுள்ள தளங்கள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகப் பிடிக்கப்பட்டு, ஆக்கிரமிக்கப்பட்டன. அங்கு தூக்குத் தூக்காக இருந்த ஜப்பானியர்கள் கரடு முரடான மலைகளுக்கு நடுவில் அகப்பட்டுக்கொண்டு ஆகாரமில்லாமல் மெலிந்து போனார்கள். அல்லது நோய்வாய்ப்பட்டு இறந்தார்கள். கடலாதிக்கம் நமக்கு இருப்பதினால் ஜப்பானியப் படைகளுக்கு உதவியும் ஸப்ளையும் கிடைக்காமல் செய்யப்பட்டு வருகிறது. இதே விதமாகத்தான் அமெரிக்கர்கள் கைப்பற்றியுள்ள தளங்களிலிருந்து அடிக்கும் தூரத்திலுள்ள எதிரி வசமுள்ள தீவுகளுக்கும் ஸப்ளைகள் போகாமல் தடை செய்யப்படுகிறது.

இந்த யுத்த தந்திரத்தைப் பயன்படும்படி செய்ய, கடல் மார்க்கங்களை ரக்ஷிக்க கடல் படை, விமானப் படை ஆதிக்கமும், படைகள் தங்குவதற்காக தளங்களை சம்பாதிக்க தரைப் படை ஆதிக்கமும் அவசியமாகும். ஆனால் தரைப் போரைப்போல பெரிய சேனைகளை ஈடுபடுத்தவேண்டுமென்ற அவசியம் இங்கு ஏற்படாது.

---

## பஸிபிக்கில் இனி என்ன நடவடிக்கை

***H. M.* ராலே.**

(யார்க் ஷையர் போஸ்ட்).

*ஜெர்மனியை முறியடித்தபின் ஜப்பானை முறியடிக்க எவ்வளவு காலம் பிடிக்கும்?*

*அதைப்பற்றிய சகுனங்கள் சாதகமாக இருக்கின்றன. நாமிழந்த தரை, கடல் பிரதேசங்களை நாம் மீட்பது சாத்யமற்றதென்று நாம் எண்ணின காலமும் உண்டு. நாம் 3,000 மைல்கள் முன்னேறி சீனக் கடலுக்கும் ஜப்பானுக்கு 600 மைல்களுக்கும் நாம் வந்துவிட்டோம். ஜப்பானிலேயே படையெடுப்பு ஏற்படுமென்று பீதி கொண்டு ஜப்பானிய மன்னரும் அவருடைய ஆலோசகர்களும் கலங்கி நிற்கிறார்கள்.*

பஸிபிக் போரின் தந்திரம் வெளிப்பட்டு வருகிறது. வருங்கால நடவடிக்கையும் தெளிவுபட்டுவிட்டது. ஜப்பான் இறுதியில் பூர்ணமாக முறியடிக்கப்படும்.

இப்பொழுது முக்கியமாக இருப்பது ஸப்ளை பிரச்னைதான். ஆயிரக்கணக்கான கப்பல்கள் விசிறிபோல் ஆஸ்திரேலியாவிலிருந்து சீனக்கடல் வரையிலும் அநேக யுத்தக் கப்பல்களின் துணையுடன் நின்று கொண்டிருக்கின்றன. இதைத் தவிர அபாரமான சக்தியுள்ள பிரிடிஷ் கடற்படை கடற்தளபதி ஸர் ப்ருஸ் பிரேசரிம் இருந்துவருகிறது.

ஜப்பானியக் கடற்கரைக்கு 250 மைல்களுக்குள் விமானந்தாங்கிகள் சென்று அவைகளிலுள்ள விமானங்கள் ஜப்பானைத் தாக்கி வருகின்றன. மாரியனாஸ் தீவுகளிலிருந்தும் சைனாவிலிருந்தும் வெடிவிமானங்கள் சென்று ஜப்பானிய ஸ்தானங்களையும், தொழிற்சாலைகளையும், துறைமுகங்களையும், கப்பல்களையும், அழித்துவருவதுடன் ஜப்பானியக் கடற்படையையும் தேடிவருகின்றன.

நேசதேசப் படைகள் ஜப்பானை நெருங்கி வரும்பொழுது, அவைகள் மணிலா, ஐவோஜிமா, யோகஹாமா முதலியவற்றினால் அமைக்கப்பட்ட ஒரு முக்கோண வடிவமாக நிற்கக்கூடும்.

ஜப்பானுக்கு இவ்விதமான அபாயம் ஏற்படும். ஜப்பானிய சக்ரவர்த்தியையும் அவனுடைய ஆலோசகர்களையும் கலக்குவது இது ஒரு பிரச்னை. கடற்தளபதி நிமிட்ஸூம் ஜெனரல் மாக்ஆர்தரும் சீனக்கடலில் ஆதிக்கம் பெறாமல் ஜப்பான் தடுத்தாலொழிய, அநேக இடங்களில் பரவியிருப்பதும் அதிக சிரமத்துடன் ஸப்ளைகளைப் பெற்று வருவதுமான கடல் தாண்டியுள்ள ஜப்பானியப் படைகள் தாய்நாட்டிலிருந்து துணிக்கப்பட்டுவிடும். மேலும் பர்மாவிலுள்ள மலேயா, போர்னியோ, இந்தோ சைனா, ஸியாம், டச்சுக் கிழக்கு இந்தீஸ் முதலிய இடங்களிலுள்ள படைகளுக்குத் தேவையான சர்ப்பரா சீனக்கடல் மார்க்கமாகத்தான்

செல்லவேண்டும். இந்த மார்க்கங்கள் அடைபட்டுவிட்டால் கடல் தாண்டியுள்ள ஜப்பானியப் படைகள் துணிக்கப்பட்டுவிடும். அவைகள் ஜப்பானிலிருந்து உதவியின்றியில் போரை நடத்த வேண்டியிருக்கும்.

பிலிப்பைன்ஸைப் பிடித்ததிலிருந்து இந்தக் கடல் மார்க்கங்களை துணிக்கக்கூடிய மத்திய ஸ்தானத்தை நேசதேசத்தார்கள் பெற்றுவிட்டார்கள். சீனக்கடல் நமது வசமாகிவிட்டால் இந்துமகா ஸமுத்திரத்திலிருந்தும் பர்மாவிலிருந்தும் ஜப்பானைத் தாக்க நமது படைகள் குவியக்கூடும். சைனுவிலிருந்தும் அலூஷியன் தீவுகளிலிருந்தும் ஜப்பானைத் தாக்கக்கூடும்.

ஜப்பானியர் வசம் இன்னும் ஏராளமான பிரதேசம் இருந்து வருகிறதென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஐரோப்பிய யுத்தம் முடிந்தபின் ஜப்பானை முறியடிக்க 18 மாதங்களாகுமென்று மிஸ்ட்டர் சர்ச்சில் சமீபகாலத்தில் மதிப்புப்போட்டார்.

தேசப்படத்தை நோக்கினுல், தீவுத்தீவாகத் தாவி, எதிரிப்படைகளைத் துடைப்பது என்ற முறையை விட்டுவிட்டு, கேந்திர ஸ்தானங்களைப் பிடிக்கும் முறையை நேசதேசப்படைகள் கையாண்டு வருகிருர்கள் என்று தெரியவரும். இந்த முக்கியமான திட்டத்துக்காகத்தான் படைகள் டச்சு நியூகினியாவிலும், மாரோடாத் தீவிலும், பாலாத் தீவுகளிலும், மாரியனுஸ் தீவுகளிலும் இறங்கின. உண்மையான லக்ஷியத்திலிருந்து எதிரியின் கவனத்தை வேறுபக்கம் இழுக்க பார்மாஸோ பேரிலும், மற்ற சில்லரை லக்ஷியங்கள் பேரிலும் விமான நடவடிக்கை நடைபெற்றது.

இதேசமயத்தில் மேற்குப் பக்கத்தில் நமது படைகள் மாண்டலேயைத் தாண்டி ரெங்கூனை நோக்கி முன்னேறி வருகின்றன. நமது கடற்படையிலுள்ள விமானங்கள் நிகோபார், மலேயாத் தீவுகளைத் தாக்கி வருகின்றன. மலேயா தீபகற்பத்தை மீட்பது வெகுநாள் தாமதப்படாது.

இவையெல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்தால் இவ்வருஷத்தின் வேனிர் காலத்திலேயே அல்லது இலையுதிர் காலத்திலேயே ஜப்பான் பேரில் படையெடுப்பு ஏற்படும் என்று நாம் நிச்சயமாக நம்பலாம்.

ஜப்பானைத் தாக்கக் குவியும் படைகள் இந்து மகா சமுத்திரம், பர்மா, சைனு, அலூஷியன் தீவுகள், பிலிப்பைன்ஸ், பஸிபிக் கடல் மார்க்கமாக வரக்கூடும். ஜப்பானியக் கடல் மார்க்கங்கள் துணிக்கப்பட்டால் பர்மா, மலேயா, ஸியாம், இந்தோ-சைனுவிலுள்ள எதிரி தரை மார்க்கமாக சீனுவுக்குள் பின்வாங்கக்கூடும். இங்கு அவைகள் பின்தூரத்திவரும் நேசதேசப் படைகளுக்கும் மார்ஷல் சியாங்கே ஷேக்கின் படைகளுக்கும் மத்தியில் அகப்பட்டுக்கொள்ளும். புதிய பர்மா ரஸ்தா வழியாக சர்ப்பராக்கள் தாராளமாகப் போய்க்கொண்டிருப்பதினுல் சீனப்படைகளும் போரை பலமாக நடத்தத் தயாராக இருக்கும்.

ஜப்பானைத் தாக்கத் தயாரிக்கப்பட்டிருக்கும் ஆயுதம் இரு முனையுள்ளது, 10 லக்ஷம் சங்கியை உள்ள சீனப்படைகள் தாய் நாட்டைக் காப்பாற்றுவதற்காக சைனுவை விட்டுப் பின் வாங்கும்படி ஜப்பானியப் படைகளை கட்டாயப்படுத்திவிடும். படைகள் ஜப்பானுக்குப் பின்வாங்க முடியாவிட்டால் அவைகள் அங்கேயே போர் புரியவேண்டும்.

கடற் கரையிலுள்ளவர்கள் எல்லோரையும், பொது ஜனங்களின் மூலப்படையையும் ஜப்பான் திரட்டிவருகிறது. ஜப்பானிலும் 40 லக்ஷம் ஜனங்களிருக்கிருர்கள். அவைகள் கிழக்குப் பிராந்தியத்தில் அநேக பிரதேசங்களில் பரவியிருக்கின்றன. ஆகையால் பூர்ணமான வெற்றி கிடைக்கவேண்டுமானுல் அவைகளை ஒவ்வொரு இடத்திலும் முறியடிக்கவேண்டும்.

ஜப்பானின் கடற்படையின் கதி என்ன? அதை வலுச்சண்டைக்கு இழுத்து ஜப்பானிய சமுத்திரங்களிலிருந்து வெளிவரும்படி செய்வதுதான் நமது முக்கியமான லக்ஷியம். நேசதேசத்தாரின் ஒன்றுபட்ட கடற்படை எல்லா வகைகளிலும் உயர்வானது. போரின் முடிவைப்பற்றி நாம் சந்தேகப்பட வேண்டியதில்லை.

---

# பர்மாவில் ஜப்பானின் மிகுந்த கவலை.

## நேசதேசப் படைகள் ஸப்ளை மார்க்கங்களைத் துணித்து விடுகின்றன.

**பிரிகெடியார் J. C. ஸ்மித் V. C.**

**(ஸண்டே டைம்ஸ் பத்திரிகையின் ராணுவ நிருபர்).**

பர்மாவைப் போல் எந்தப் போர் முனையிலும் போக்குவரத்து மார்க்கங்கள் யுத்தப் போக்கை பாதிக்கவில்லை.

சென்ற சில மாதங்களில் ஜப்பானியர்களைப் போஷிக்கும் பிரச்னை மோசமாகி விட்டது. அது இப்பொழுது மகத்தான பிரச்னையாகி விட்டது. போர் முனையில் ஈடுபடுத்தும் படை அளவுக்கும் வரையறை ஏற்படுத்துவதாக ஆகிவிட்டது.

ஜப்பானிலிருந்து டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளுக்கும், இந்தோ சைனாவுக்கும், மலேயாவுக்கும், பர்மாவுக்கும் சர்ப்பராக்கள் கடல் வழியாகவும், தெற்கு சைனா வழியாகவும் தான் போக வேண்டும். பர்மாவுக்குச் செல்ல சாமான்கள் மலாக்கா ஜலசந்தி வழியாக ரெங்கூனுக்குச் செல்ல வேண்டும். ஜப்பானியர்கள் அந்தமான், நிகோபார் தீவுகளை ஆக்கிரமித்திருந்த போதிலும் மலாக்கா ஜலசந்தியைத் தாண்டிச் செல்லும் பிரயாணம் அபாயம் பொருந்தியதாகி விட்டது. ஏனெனில் பிரிடிஷ் நீர்மூழ்கிகளும், நேசதேச விமானப் படையும் ஜப்பானியக் கப்பல்களைத் தாக்கி வருகின்றன. மேலும் சிலோனில் சக்திவாய்ந்த ஒரு பிரிடிஷ் கடற்படை இருப்பதினால் எந்த தேசத்திலும் ஜப்பானியக் கப்பல்களை வழிமறிக்கக் கூடும்.

இது சம்பவிக்குமென்று ஜப்பானியர்கள் நன்கு அறிவார்கள். ஆகையால் அவர்கள் பாங்காக்குக்கும், மோல்மீனுக்கும் ரெங்கூனுக்கும் இருப்புப் பாதைகளை அமைத்திருக்கிறார்கள். மாக் ஆர்தரின் படைகள் பிலிப்பைன்ஸிலிறங்கியதிலிருந்து ஹாஸானுக்கு வடக்கில் தெற்கு சீனக்கடலுக்குள் செல்லும் கடல் மார்க்கம் துணிக்கப்பட்டுவிட்டது.

இவ்விதமாக கடல் மார்க்கம் துணிக்கப்படுமென்றும் ஜப்பானியர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். ஆகையால் பர்மாவிலிருந்து இருப்புப் பாதையை பாங்காக், சைகோன் வழியாக அமைத்து அதை காண்டன் ஹாங்கௌ, பீகிங் இருப்புப் பாதையுடன் இணைத்திருக்கிறார்கள். இந்தோ-சைனாவில் வட கிழக்கு மூலையில் 200 மைல்களைத் தவிர பாக்கி இடத்தில் இந்த இருப்புப் பாதை பூர்த்தியாகி விட்டது.

ஆனால் இந்த இருப்புப் பாதை வெகு நீளமாக இருப்பதினால் தரை மார்க்கமாகவும் ஆகாய மார்க்கமாகவும் அது பல இடங்களில் தாக்குதலுக்குட்படக்கூடியது. மேலும் அதன் வழியாக அனுப்பப்படும் சாமான்களும் குறைவாகத் தானிருக்கும். ஆகையால் பர்மாவிலுள்ள ஜப்பானியப் படைகள் கைவசமிருக்கும் இருப்புகளைக் கொண்டும் நேசதேச கடல், விமானத் தாக்குதல் அபாயத்துக்குட்பட்ட கப்பல்கள் மூலமாகவும் சைனாவிலிருந்து வரும் ஒரு இருப்புப்பாதை மூலமாகவும் வரும் ஸப்ளைகளைக் கொண்டும் தான் ஜீவித்துவர வேண்டும். இந்த ஸப்ளைகளும் ஒரு அளவுக்குட்பட்ட படைகளைத் தான் போஷணை செய்யக் கூடும்.

நமக்கு ஒரு அம்சமில்லாவிடில், மாண்டலே பிரதேசத்தில் போர்புரியும் நமது படைக்கும் போதுமான சர்ப்பராக்களைக்கொண்டு போக முடியாது. அதாவது நமக்கு விமான மூலம் ஸப்ளைகள் கிடைத்து வந்தன. துருப்புகள் வந்து கொண்டிருந்தன. சென்ற வருஷத்திய வெற்றிகரமான போருக்கும், இப்போதிய நமது யுத்தத் தந்திரத்துக்கும் விமானப்படை உதவிதான் காரணமாகும்.

ஜப்பானியர்களிடம் அவ்விதமான விமானப்படை இல்லை. இருந்தாலும் அதை அவர்கள் உபயோகிக்க முடியாது. அதற்கு ஆகாய ஆதிக்கம் வேண்டும். பர்மா ஆகாயத்தில் நேசதேசப்படைகளுக்குத் தான் பூர்ணமான ஆகாய ஆதிக்கமிருந்து வருகிறது.

---

## பஸிபிக்கில் கனுடிய கடற்படை போர் புரியும்.

### ஜப்பானைத் தாக்க அதிகமான சக்தி.

(பிரியான் டன்ஸ்டால்).

பலமான நடவடிக்கை ஏற்படாவிட்டாலும் அநேக கடல்களிலிருந்து அடிக்கடி தகவல்கள் வந்துகொண்டிருப்பதினால் பிரிடிஷ் கடற்படை சுறுசுறுப்புடன் வேலைசெய்து வருகிறதென்று தெரியவருகிறது. சென்ற சில நாட்களில் அப்பேற்பட்ட தகவல்கள், இந்துமகா சமுத்திரம், பஸிபிக் சமுத்திரம், அட்லாண்டிக்கடல், வடக்குக் கடல், மத்தியதரைக் கடலிலிருந்து கிடைத்திருக்கின்றன.

தூரக்கிழக்குப் போரில் பிரிடிஷ் கடற்படை ஜாஸ்தியாக உபயோகிக்கப்படுகிறதென் பது ஸிட்னியில் கப்பற் பழுதுபார்க்கும் தளம் திறக்கப்பட்டு விட்டதென்று உத்தியோக முறையில் வெளியிடப்பட்டிருப்பதிலிருந்தும் பிரிடிஷ் நீர்மூழ்கிகளுக்கு அதிக வெற்றிகள் கிடைத்திருக்கின்றன வென்பதிலிருந்தும் நிருபணமாகிறது.

நீர்மூழ்கிகளின் சம்பந்தமாக, "நீர்மூழ்கிகள் 74 கப்பல்களை மூழ்கடித்திருக்கின்றன வென்றும், மற்றும் 25-ஐ பழுதுபடித்தியிருக்கின்றனவென்றும் தெரியவருகிறது.

இந்த வெற்றிகள் மலாக்கா ஜலசந்தியிலும், சுமாத்ராவின் மேற்குக் கரையிலும், நிகோபார் தீவுகளிலும் ஏற்பட்டவை. மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களில் ஒரு எண்ணெய்க் கப்பலும், சுரங்க வெடிகளைப்பாவும் கப்பலும், மூன்று சிறிய யுத்தக் கப்பல்களும் இருந்தன. மற்றவைகள் சிறிய ஸப்ளைக் கப்பல்களும் படைகளையிறக்கும் படகுகளும். இந்த சமுத்திரங் கள் வழியாக ஜப்பானியர்கள் இனிமேல் பெரிய சர்ப்பராக் கப்பல்களை அனுப்பமுடியாது. ஆகையால் பர்மாவுக்கும் கிழக்கு இந்தீஸ் தீவுகளுக்கும் ஜப்பான் அனுப்பும் ஸப்ளைகள் சிறிய கப்பல்கள் மூலம் கொண்டுபோகப்படுகின்றன.

### ஸிட்னியின் புதிய கப்பல் பழுது பார்க்கும் தளம்.

ஸிட்னியில் அமைக்கப்பட்டிருக்கும் புதிய கப்பற் தளத்தில் மிகப்பெரிய யுத்தக் கப்பல் களும் சாமான் கப்பல்களும், 38 அடி 10 அங்குல ஆழம் தேவைப்படும் S. S. க்வீன் மேரியும் தங்கி நிற்கக்கூடும். இந்த தளம் கனடாவின் பஸிபிக் கடற்கரையில் எஸ்கி மால்டிலுள்ள தளத்தைப்போல் பெரியது. அங்குதான் க்வீன் எலிஸபத் துருப்பேற்றிச் செல்லும் கப்பலாகத் திருத்தியமைக்கப்பட்டது. இரண்டு கப்பற் தளங்களும் ஜப்பானைத் தாக்க உபயோகமுள்ளதாக இருக்கும்.

உலகத்திலேயே மிகுதியான போர்க் கப்பல்களும், நீர் மூழ்கிகளைத் தாக்கும் கப்பல் களுமுள்ள கனடிய கடற்படை ஜப்பானுடன் போரைத்தொடுக்க ஒரு பெரிய கடற்படையை அனுப்பக்கூடும். அது பேருக்கு மட்டும் அங்கு செல்லாது. பிரிடனுக்கும் அமெரிக்கா வுக்கும் செல்லும் சாமான் கப்டல் கூட்டங்களுக்கு வடக்கு அட்லாண்டிக்கில் கனடிய கடற்படைதான் ரக்ஷணை அளித்து வருகிறது. நூதனாகச் சஞ்சாரிகளான யூகாண்டா, ஒண்டாரியோ என்ற கப்பல்கள் போர்க்கப்பல்களுடன் கூட்டிச்சேர்க்கப்படும். விமானந் தாங்கிக் கப்பல்களான நாபாவும், பஞ்சரும் தயார் செய்யப்படுகின்றன. அவைகளும் துணைக்காவல் கப்பல்களுடன் விமானங்களைத் தாங்கிச்செல்லும். கனடாவின் கடற்படை யில் இப்பொழுது 350 போர்க் கப்பல்களும், 450 உதவிக் கப்பல்களுமிருக்கின்றன.

பிரிடனைச் சுற்றியுள்ள சமுத்திரத்தில் பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த மூன்று நாசகாரிகளும் கனடியக் கடற்படையைச் சேர்ந்த நாசகாரியும் சொராட்டத் தீவிலிருந்த 500 நார்வீஜியர்களை ரக்ஷித்தது. இந்த நடவடிக்கை வடக்கு முனைக்கருகிலுள்ள ஜெர்மன் ஸ்தானங்களிலிருந்து 60 மைல்களிலுள்ள ஒரு மூனையில் பட்டப்பகலில் நடைபெற்றது. சமீபத்தில் ஜெர்மன் யுத்தக் கப்பல்கள் இருந்தன. ஆகிலும் அவைகள் இந்த நடவடிக்கை யைக் கண்டுபிடிக்கவில்லை. காப்பாற்றப்பட்ட நார்வீஜிய ஆடவர்களும், ஸ்திரீகளும், குழந்தைகளும் அநேக கஷ்டங்களுக்குள்ளாகி இருக்கிறார்கள். அவர்களை ஜெர்மானியர்கள் வேட்டையாடியிருக்கிறார்கள். இந்தக் கடற்படைக்கு காப்டன் J. H. அலிஸன், D. S. O. R. N. தலைமை வகித்தார்.

பிரிடிஷ், நார்வீஜிய கடற்படைகள் ஸப்ளைகளைக் கொண்டுபோவதற்கும் நார்வேயி லுள்ள படைகளைப் பின்வாங்கிச் செல்லுவதற்கும் ஜெர்மானியர்கள் நார்வீஜிய சமுத்திரங் களை உபயோகிக்காமல் தடுத்து வருகின்றன. நார்வீஜியர்கள் ஓட்டிவந்த பிரிடிஷ் கடற் படையைச் சேர்ந்த மோட்டார் மீன்வெடிப் படகுகள் துணைக்காவல் கப்பலுடன் சென்ற 5,000, 3,000 டன்கள் எடையுள்ள இரண்டு ஜெர்மன் கப்பல்களின் பேரில் மீன்வெடிகளைப் போட்டன.

மார்ச்சு மாதம் 18-ம் தேதி இரவில் பிரிடிஷ் கடற்கரைக் கமாண்டைச் சேர்ந்த மஸ்கிடோ விமானங்கள் பெர்லினுக்கு சமீபத்தில் பலமான தற்காப்புகளுள்ள ஆலிஸண்ட் துறைமுகத்திலுள்ள சாமான் கப்பல்களை பீரங்கிகளாலும் அவுட் வாணங்களாலும் தாக்கி ஐந்து கப்பல்களைப் பழுது படுத்தின. பால்டிக்கிலுள்ள ஜெர்மன் கப்பல்கள் பிரிடிஷ் விமானப்படை பாவிய சுரங்கவெடிகளால் தடைப்பட்டிருக்கின்றன.

மார்ச்சு மாதம் 17-ம் தேதி இரவில் ஏராளமான ஜெர்மன் இ படகுகள் பிரிடிஷ் சாமான் கப்பல்களைத்தாக்க வடக்குக் கடலைத்தாண்டிச்சென்றன. அவைகளை பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த வெல்லிங்டன் விமானங்கள் கண்டு பிடித்தன. பிரிடிஷ் கடற் படை அவைகளைத் துரத்தியடித்தது. அவைகள் டச்சுக் கடற்கரைக்குப் பின்வாங்கிய பொழுது அவைகளை பெல்ஜியத்திலுள்ள கடற்கரைக் கமாண்டைச் சேர்ந்த ஸ்வோர்ட்பிஷ் கடல் விமானங்களும் பிரிடனிலிருந்து புறப்படும் வெல்லிங்டன் விமானங்களும் வழிமறித்தன.

மத்தியதரைக்கடலில் பிரெஞ்சு இதாலிய எல்லைச் சரகத்திலும் ஜெனோவா வளைகுடாவிலும் கடற்படை நடவடிக்கை அதிகரித்திருக்கிறது. பிரிடிஷ், அமெரிக்க, பிரெஞ்சு நாசகாரிகள் எதிரியின் ஸ்தலங்கள் பேரில் குண்டுகளை வீசி வந்ததுடன் பிரிடிஷ் நாசகாரிகளால மிடியாரும், மில்னேயும் ஜெனோவாத் துறைமுகத்தின் பேரில் குண்டுப் பிரயோகம் செய்தன.

---

# ஜப்பானியர்கள் நியூகினியாத் தீவில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

## *ஜப்பானிலுள்ள ஸப்ளைகள் வருமென்ற நம்பிக்கையில்லை.*

**A. J. மாக்வின்னி.**

---

நியூ கினியாவிலுள்ள ஜப்பானியப் படைகளுக்கு சாவைத் தவிர வேறு வழியில்லை. வேவாக் பிராந்தியத்திலிருந்து கிடைத்துவரும் தகவல்களிலிருந்து ஆஸ்திரேலிய 1-வது படையைச் சேர்ந்த, காட்டுப் போரில் தேர்ச்சி பெற்ற படைகளால் ஜப்பானியர்கள் வளைக்கப் பட்டிருக்கிறார்களென்றும், தேசம் கரடு முரடாக இருப்பதால் அவர்கள் போதுமான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யக்கூடவில்லையென்றும், ஜப்பானிலிருந்து யாதொரு விதமான ஸப்ளைகள் வருமென்ற நம்பிக்கையிலிருந்தும் அவர்கள் துணிக்கப்பப்பட்டு விட்டார்களென் றும் தெரியவருகிறது.

அவர்கள் ஒவ்வொருவராகப் பிரிந்து மலைகளுக்குப் பின்வாங்கவேண்டும் அல்லது சரணு கதி செய்யவேண்டும். இது சம்பாவிதமில்லை. போதுமான உணவுப் பொருளும், வைத்திய வசதியும் கிடைக்காததினால் ஜப்பானியர்களின் தேக ஆரோக்கியம் குறைந்துவிட்டது. அங்கு நம்பிக்கையை இழந்து 14,000, 15,000 ஜனங்களிருந்து வருகிறார்கள்.

அதற்கு எதிர்த்தாப் போலுள்ள போகன்வில்லித் தீவிலும் 10,000 ஜப்பானியர்கள் இதேவிதமான கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கும் சர்ப்பராக்கள் வந்து சேராது. அவர்கள் களைத்துப் போயிருக்கிறார்கள். தங்களுக்கு உணவு சம்பாதித்துக் கொள்ளுவதற்காக அவர்கள் பொது மக்களைப் பட்டினி போட்டுவிட்டார்கள். பன்றிகளையும், கால் நடைகளையும் கொன்றுவிட்டார்கள். கிராமங்களிலுள்ள தோட்டங்களைக் கொள்ளை படித்து விட்டார்கள். அவர்கள் மனிதர்களையே கொன்று தின்கிறார்களென்றும் சொல்லப் படுகிறது. அடுத்துவரும் சில மாதங்களில் போகன்வில்லியில் ஜப்பானின் ஏற்பாடான எதிர்ப்பு நின்றுவிடுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. ஆகிலும் ஆஸ்திரேலியப் படைகளுக்கு நியூ பிரிடனில் இன்னும் அதிகமான சிரமம் இருக்கிறது, நியூ பிரிடனிலிருந்த 50,000 ஜப் பானியப் படைகளில் பாதி படைகள் பாக்கியிருக்கின்றன. அவைகள் கடுமையாகப் போரை நடத்திவருகின்றன. ஆஸ்திரேலியாவைத் தாக்க ஜப்பான் போட்ட திட்டத்தில் நியூ பிரிடன் ஒரு பெரிய ஆயுத சாலையாக இருந்ததால் அங்கு ஜப்பானியர்களுக்கு ஏராளமான வெடி மருந்து இருக்கக்கூடும்.

நியூ கினியாத் தீவுகளில் யுத்தப்போக்கு நிலைபெற்றிருக்காவிட்டால் உள் நாட்டு ஜனங் கள் கஷ்டப்படுகிறார்களென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. போஷணைக் குறைவு ஏற் படும் வரையில் அவர்களிடமுள்ள உணவுப் பொருள்கள் அபகரிக்கப்பட்டுவிட்டன.

# திருச்சினுப்பள்ளியிலுள்ள உபரி உதவி ரிக்ரூடிங்க் ஆபீஸரின் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சி.

மேலே சொல்லிய ஆபீஸர் அடியில் குறிப்பிட்ட பிரகாரம் சுற்றுப் பிரயாணம் செய்வார்.

அப்பொழுது அவர் இந்திய சேனை, கடற்படை, விமானப்படையில் கீழ்கண்ட வேலைகளுக்கு நபர்களைப் பார்வையிட்டுத் தேர்ந்தெடுப்பார்.

**சேனை :** கிளார்க்குகள், தச்சு வேலை, செம்பு வேலை, கான்கிரிட் வேலை, உதவி கார் ஓட்டிகள், போதகர்கள், டிரைவர்கள், (M. T.) மின்சார வேலை, இந்திய சேர்வீஸ் படையில் சமிக்ஞைக்காரர்கள், I. C. and நீராவி எஞ்ஜின் டிரைவர்கள், பிட்டர்கள், பாரியர்கள், இன்ஸ்ட்ருமெண்ட் மெகானிக்குகள் I. A. C. C.-யிலும், I. A. M. C-யில் V. C. C. காட்டுகள், மெஷின் வேலைக்காரர்கள், நர்ஸிங் சிபாய்கள், ஸ்பெஷலிஸ்ட் இம்புரூவர்கள், வர்ண வேலைக்காரர்கள், பாக் செய்கிறவர்கள், ப்ளம்பர்கள், தையல்காரர்கள், தகர வேலைக்காரர்கள், டர்னர்கள், டெக்ஸ் டைல் ரீபிட்டர்கள், வல்கனிஸ்டுகள், வெல்டர்கள், ரொட்டிக்காரர்கள் etc.

**கடற்படை :** கடற்படையாளர்கள், ஸ்டோகர்கள் தகவல் அறிவிப்பு பிராஞ்சு ஆர்டிபிஸர்கள், நோய்வாய்ப்பட்டவர்களின் உதவியாளர்கள், எழுத்து வேலைக்காரர்கள், மோட்டார் எஞ்ஜினியர்கள், ஸ்கூல் மாஸ்டர்கள் etc.

**விமானப்படை :** மின்சார வேலைக்காரர்கள், பிட்டர்கள், R. D. F. மெகானிக்குகள், ஒளிப்படம் பிடிப்பவர்கள், வெயர்லஸ் ஆபரேடர்கள், ஆர்மரர்கள், ப்ளேட் மெகானிக்ஸ், ஆயுத ரிபேர்கள், தச்சு வேலைக்காரர்கள் கிளார்க்குகள், டெலிபோன் ஆபரேடர்கள், முஸ்தீப்பு அஸிஸ்டெண்டுகள், விமானப்படை வேலைக்காரர்கள் etc.

| | | | | |
|---|---|---|---|---|
| புதுக்கோட்டை | 15—4—45<br>08—00 hrs. | திருச்சி | 16—4—45<br>16—00 hrs. | ரஸ்தா மார்க்கம் திருச்சிக்குத் திரும்புவது. |

**பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.**

**அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.**

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலையத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் 243 (1-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 7- 4-45 | நார்த்தாமலை | ... மாலை | 7.00 |
| 8- 4-45 | ,, | ... ,, | 7.00 |
| 9- 4-45 | ,, | ... ,, | 7.00 |
| 10- 4-45 | ,, | ... ,, | 7.00 |
| 11- 4-45 | மலைக்குடிப்பட்டி | ... ,, | 7.00 |
| 11- 4-45 | கோனுபட்டு | ... மாலை | 7.30 |
| 12- 4-45 | பனையப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | ராங்கியம் | ... ,, | 7.30 |
| 13- 4-45 | கொடும்பாளூர் | ... ,, | 7.00 |
| ,, | விராலூர் | ... ,, | 7.30 |

## பிரஸங்கம் 244. (2-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 14- 4-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 |
| 15- 4-45 | தென்னதிரயன்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | விசலூர் | ... ,, | 7.30 |
| 16- 4-45 | மழையூர் | ... ,, | 7.00 |
| ,, | கரம்பக்குடி | ... ,, | 7.30 |
| 17- 4-45 | குழிபிறை | ... ,, | 7.00 |
| ,, | செவலூர் | ... ,, | 7.30 |
| 18- 4-45 | திருவரங்குளம் | ... மாலை | 7.00 |
| ,, | வம்பன் | ... ,, | 7.30 |
| 19- 4-45 | விராலிமலை | ... ,, | 7.00 |
| ,, | பொருவாய் | ... ,, | 7.30 |
| 20- 4-45 | வாளரமாணிக்கம் | ... ,, | 7.00 |
| ,, | ஏம்பல் | ... ,, | 7.30 |

## யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | |
|---|---|
| 7—4—45 | நார்த்தாமலை. |
| 8—4—45 | ,, |
| 9—4—45 | ,, |
| 10—4—45 | ,, |
| 11—4—45 | கீழாநிலை-புதுப்பட்டி. |
| 12—4—45 | குழிபிறை. |
| 13—4—45 | புதுக்கோட்டை. |
| 14—4—45 | பொன்னமராவதி. |
| 15—4—45 | தீத்தான்விடுதி. |
| 17—4—45 | வடகாடு. |
| 19—4—45 | ஆலங்குடி. |
| 20—4—45 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,700—11-4-45.